வைத்ய கலாநிதி

THE VAIDYA KALANIDHI

EDITOR
Pandit M. Duraiswami Aiyangar,
Ayurveda Bhushan.

பத்திராதிபர்
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்
ஆயுர்வேத பூஷண

புஸ்தகம் 1. Vol. 1. — ப்ரமாதீச வருஷ மாசி மீ —MARCH—1914. — ஸஞ்சிகை 7, No. 7.

THE INFANTILE MORTALITY.

குழந்தைகளின் மரணம்.

BY

Dr. N. L. DESAI, M.D.,
Retired Civil Surgeon.

இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்கிற பத்திரிகையில் ஒரு வியாஸம் எழுதி இவ்விஷயத்தில் ஜனங்களுடைய மனதில் ஓர் ஊக்க முண்டாகுமாறு செய்தேன். பயங்கரமாக மிதமிஞ்சி மரணம் ஸம்பவிப்பதானது ஜனங்கள் செய்யும் பாவச் செயல்களின் பரிணாம மென்றே சொல்ல வேண்டும். பாவங்களுக்குக் காரணம் அறிவின்மை. கல்வி கற்று அறிவு அபிவ்ருத்தியானால் பாவச் செயல்களில் ப்ரவ்ருத்தியு முண்டாகாது; மரணங்களும் அபரிமிதமாய் ஸம்பவிக்காது. அறிவின்மையினால் சுக்ரம் முதலிய தாதுக்கள் பலவாறு கோளாறடைவதற்கு வழியுண்டு. மூடரான தாய் தந்தையர்களின் வசத்திலுள்ள குழந்தைகள் ஆரோக்கியக் குறைவின்றி போஷிக்கப்பட மாட்டாவாகையால், அவை அகால ம்ருத்யுவை அடைந்து வருகின்றன. இதில் ஸந்தேஹ மில்லை. சிறு பிள்ளைகளுக்கு அடியில் கூறப்படும் காரணங்களால் அகாலமரணம் நேரிடுவதாகத் தெரிய வருகிறது:—

(1) கர்ப்பிணிகளுடைய சரீரத்தைத் தகுந்தவாறு இரக்ஷிப்பதில் அஜாக்கிரதையும் அவ்விதம் செய்வதில் பரிசய மின்மையும். (2) பிரஸவ காலத்தில் குழந்தையையும் தாயையும் வெகு ஜாக்கிரதையாகப் பரிபாலிக்காமையுடன் வைத்தியர்களால் செய்யப்படும் மூடத்தனமான சிகித்ஸா கிரமமும் ஒன்று. (3) பிரஸவித்த பிறகு இருவருக்கும் அன்னபானாதிகளில் நேரிடும் முறை கேடு. (4) குழந்தைகளைப் பரிபாலிப்பதிலும், அவற்றிற்கு உண்டாகும் பிணிகளுக்கு ஏற்ற பரிஹாரம் தகுந்த காலத்தில் செய்வதிலும் தாய் தந்தையருக்கு அறிவின்மை.

கர்ப்பிணியைப் பரிபாலிக்கும் முறை:—நமது தேசத்தில் அநேக இடங்களில் கர்ப்பிணியானவள் தனது தாய் வீட்டில் வஸிப்பதே வழக்கமா யிருந்து வருகிறது. கணவன் வீட்டில் வஸித்தால் கணவனுடைய ஸம்பந்தத்தால் கர்ப்பத்திற்கு ஏதேனும் சேதம் நேரிடக் கூடுமென்றும், கணவன் வீட்டில் வேலை செய்ய வேண்டி யிருக்கு மென்றும் நினைத்து இவ்வித வழக்கம் ஏற்பட்ட தென்கலாம். மேலும் மாமி மாமனார் மூலமாக ஸ்த்ரீகளுக்கு ஏதேனும் மனவருத்தங்கள் உண்டாவது ஸஹஜமாதலால், கர்ப்பகாலத்தில் அவ்வித மனக்கலக்கங்களால் கர்ப்பத்திலிருக்கும் சிசுவின்

மூளையினுடைய தன்மைக்கும் இயற்கையிலேயே ஏதேனும் விகாரம் ஸம்பவிக்கக் கூடும். ஆகையால் சுத்தமான வாயுவை வேண்டியமட்டிலும் ச்வஸிப்பதற்கும், அதிகமாக கஷ்டப்பட்டு வேலை செய்யாமலிருப்பதற்கும், புஷ்டியையும் பலத்தையும் தரக்கூடிய அன்னபானாதிகளை உட்கொள்வதற்கும், மனது எவ்விதத்திலும் கவலையற்று எப்பொழுதும் பிரஸன்னமாயிருப்பதற்கும் தகுந்தவாறு தனதிடம் அன்பார்ந்த பந்து ஜனங்களிடம் கர்ப்பிணி வஸிப்பது உசிதமே.

பிரஸவகாலத்தில் தாயையும் சிசுவையும் பரிபாலிக்கும் முறை:—சில ஸமயம் பிரஸவிப்பதற்கு எட்டு அல்லது பத்து நாள் முன்பாகவே பிரஸவ வேதனை யுண்டாவதுண்டு; ஒருகால் இது இயற்கைப்பிரஸவவேதனையாகவு மிருக்கலாம்; ஆகையால் அப்பொழுது உண்டாகும் வேதனை இரண்டு விதமாகும். இவ்விஷயத்தில் சிலவைத்தியர்கள் பிரமிப்பார்கள். அப்படிப் பிரமையுண்டாகும் போது ஸாவதானமாக காரியம் செய்யாமல் முறை கேடான மார்க்கத்தில் சில வைத்தியர்கள் சிகித்ஸை செய்ய முயல்வார்கள். சிலர் அந்த ஸமயத்தில் தமது திறமையைக் காட்ட வேண்டுமென்று நினைத்து சஸ்திரங்களைப் பிரயோகித்து சிசுவை வெளிப்படுத்தப் பிரயத்னம் செய்வார்கள். நான் இருபத்தைந்து வருஷகாலமாய் வைத்தியத்தொழிலில் புகுந்து வேலைசெய்துவருகிறேன். 13-வருஷங்கள் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் சிகித்ஸை செய்து வந்திருக்கிறேன். ஸ்திரீகள் பிரஸவிக்கிற காலத்தில் சஸ்திரங்களை யெடுத்து நான் சிகித்ஸை செய்ய நேர்ந்ததேயில்லை; ஒரு முறையாவது நான் சிகித்ஸை செய்து வந்த இடங்களில் தாய்க்காவது சிசுவுக்காவது எவ்வித கெடுதியும் உண்டானதில்லை. எவர்கள் இயற்கையான தன்மைகளுக்கு விரோதமில்லாமல் பிரஸவிக்கிறார்களோ, அவர்களுக்கு சஸ்திர பிரயோகம் செய்து பிரஸவிக்கவேண்டிய அவசியமிராது; அவர்களுக்கு அந்த ஸமயத்தில் அதிக கஷ்டமும் நேரிடாது. பிரஸவித்தபின் ஒரு மணி ஸாவகாசத்திற்குள்ளாகவே வைத்தியன் தான் செய்ய வேண்டிய காரியங்களைத் திறமையுடன் செய்து முடிக்க வேண்டும். இந்த ஸமயத்தில் செய்ய வேண்டியவைகளில் இரண்டு காரியம் முக்கியமானவை:—(1) தொப்புட்கொடி யறுத்தல்; (2) பிரஸவித்த ஸ்த்ரீயின் சரீரத்தைப் பாதுகாத்தல். தொப்புட்கொடியை அறுத்தபின்பு, மிருதுவான வஸ்திரத்தினால் குழந்தையின் வயிற்றைச் சுற்றிவைக்க வேண்டும். குழந்தையைக் குளிப்பாட்டும் போது நாபியில் ரணமுண்டாகாமலிருக்குமாறு ஜாக்கிரதையாகப் பார்க்கவேண்டும். இதில் அஜாக்கிரதையாயிருந்தால் குழந்தைக்கு அநேக விதமான ஆரோக்கியக்குறைவுகள் உண்டாகின்றன. பிரஸவித்தபின் இரண்டு மூன்றுமணி கழித்து ஸ்த்ரீயினிடமுள்ள எல்லா வஸ்திரங்களையும் (படுக்கையிலுள்ளவஸ்திரம் முதலான வற்றையுங்கூட) அப்புறப்படுத்தி வேறு வஸ்திரங்களை உடுப்பதற்கும் படுப்பதற்கும் உபயோகிக்க வேண்டும். அரிஷ்டம் என்கிற சங்கா தோஷங்கள் உண்டாகாமலிருப்பதற்காக சாந்தி கர்மங்கள்செய்வது நலமே. பிரஸவித்த ஸ்த்ரீ நித்திரைபோகும் போது ஒருவித தடங்கலும் செய்யக்கூடாது.

குழந்தைக்கும் தாய்க்கும் அன்னபானாதிகள்:— இவ்விருவருக்கும் உணவு கொடுக்கும் விஷயத்தில் இந்தியாவில் அநேகம் தவறுதலான காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு வேண்டிய அளவு காலமறிந்து உணவு கொடுக்கப்படுவதில்லை. பிரஸவித்த பிறகு 24 மணி ஸாவகாசம் கழித்து ஸ்த்ரீக்கு எவ்வித தோஷமுமில்லாத காய் கறிகளுடன் இலகுவான ஆஹாரம் கொடுக்கலாம். ஐந்தாறு நாளானதும் குடிப்பதற்குப் பால் கொடுப்பதால் ஒருவித தீங்கும் கிடையாது. பிரஸவித்த ஸ்த்ரீ

கு இரண்டாவது அல்லது மூன்றாவது
னத்தில் ஸ்தனங்களில் பால் சுரக்க ஆரம்
க்கும்; அதற்காகச் சிறிது ஜ்வரமும் வருவ
துண்டு; அந்த ஸமயத்தில் இலகுவான ஆஹா
ங்களைக் கொடுக்காமற்போனால் (பால் ஜ்வர
மெனப்படும்) அந்த ஜ்வரம் அதிகரித்து
டும். ஆகையினால் எளிதில் ஜீர்ணமாகக்கூடிய
ஆஹாரங்களைப் பிரஸவித்தவர்களுக்குக் கொடு
கவேண்டியது அவசியம். இந்த ஜ்வரம்
-வது நாள் தானே குறைந்துவிடும்

குழந்தைகளுக்கு அவற்றின் தாய்ப்பாலை
வெகு சிறந்த உணவாகு மென்பதில் ஸந்தேஹ
மில்லை. ஆனால் அனேகம் வருஷமாக என்னு
டைய அநுபவத்தை நோக்குங்கால், இத்
தேசத்திய ஸ்த்ரீகளில் பெரும்பாலமையோர்
ஏதேனும் ஒரு ரோகத்தினால் வெளிக்குத்
தெரிந்தும் தெரியாமலும் பாதிக்கப்பட்டிருப்
பதுமல்லாமல், பொதுவில் இவர்கள் மிகவும்
பலங் குன்றியவர்களாகவும் இருக்கிறார்கள்;
ஆகையினால் இவர்களுடைய முலைப்பால்தோஷ
மற்றிருக்குமென்றும், ஆரோக்கியத்தை அபி
விருத்தி செய்யக்கூடியதென்றும் ஒருகாலும்
கூற முடியாது; ஆகவே குழந்தைகளுக்கு எவ்
வயதிலும் பசும்பாலைப் போட்டுவதே உத்த
மம். ஆனால் தாய்ப்பால் முற்றிலும் ஆகா
தென்று சொல்வதாக நினைக்கக்கூடாது. சில
ஸமயம் முலைப்பால் ஊட்டினாலும் பசும்பாலும்
போட்டுவது நலமென்பது எனது கருத்து.

இங்கு குழந்தைகளைப் படைத்த நவ நாகரிக
ஜனங்கள் எப்பொழுதும் நினைவில் வைக்க
வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. பசும்பாலைப்
போட்டுவதற்கு ரப்பருடன் கூடிய புட்டிகளை
எப்பொழுதும் உபயோகிக்கக்கூடாது; அவற்
றை அடிக்கடி சுத்தம் செய்யவேண்டியிருக்கி
றது; அவற்றை சுத்தம் செய்வது வெகு எளி
தென்று பலர் நினைக்கக்கூடும்; அவற்றைக்
கொதிநீர் முதலியவற்றால் சுத்தம் செய்வதற்

கென்று சில கருவிகள் உண்டு; அக்கருவிகளும்
அடிக்கடி இவ் வேலையைச் செய்வதற்கென்று
அறிவுள்ள சில தாதிகளும், ஸமயம் வந்த
போது விசேஷமான விஷயங்களை அறிவிப்ப
தற்கு ஒரு கற்றறிந்த வைத்தியனும் இருந்
தால் இவ்வாடிக்கையினால் குழந்தைகளுக்கு
அதிக தீங்கு நேரிடாமல் அவற்றைக் காப்பாற்
றலாம். கைகள் நிரம்ப ஸம்பாதிக்கும் பிரபுக்
களுக்கும், அதிலும் விசேஷமாக ஐரோப்பிய
ருக்கும் இவ்விதம் செய்வது எளிதே யன்றி
மற்றவருக்கு இது எளிதுமல்ல எவ்விதத்தி
லும் ஏற்றதுமல்ல. என்னுடைய அநுபவத்தின்
பேரில் நான் இவ்வித தீர்மானத்திற்கு வந்தே
னேயன்றி, ஏதோ மனோபாவத்தை ஒரு
ஊஹையின்பேரில் இவ்வாறு எழுதுவோமெ
ன்று நினைத்தவனல்ல. வெள்ளியினால் செய்த
பாலடை அல்லது ஒரு சிறிய கரண்டியைக்
கொண்டு பாலூட்டுவது நலம். இவற்றைச் சுத்
தம் செய்வதில் அதிக சிரமமில்லை. பாலூட்டிய
பின்பு சீமைச் சுண்ணாம்பினால் உள்ளும்
புறமும் தேய்த்துக் கழுவி கொதிக்கும் வெந்
நீரில் போட்டு விட்டால் இவை சுத்தமாய்
விடும்.

ஒன்பதாவது மாதம் வரையில் பசும் பாலு
டன் அதற்கு ஸம அளவு ஜலம் சேர்த்துப்
போட்ட வேண்டும். முலைப்பாலின் சுவையும்
உண்டாவதற்காக அதில் சிறிதளவு கற்கண்
டையும் பொடித்துச் சேர்க்கலாம். இளங்
குழந்தைகளுக்கு இரண்டு மூன்று வேளை
பசும்பால் போட்டுவதுடன், மூன்று நான்கு
வேளை முலைப்பாலும் ஊட்டி வரவேண்டும்.
பிரஸவித்த பின் மீண்டும் மாத விடாய் வரும்
வரையில் அல்லது அதற்கு முன்பாகவே குழ
ந்தைக்கு முலையூட்டுவதை நிறுத்திவிட வேண்
டும். மாதவிடாய் உண்டான பிறகு முலையூட்டு
வது மிகவும் பிசகு. கர்ப்பிணியாக ஆய்விட்
டால் அடியோடு ஸ்தந்யம் கொடுக்கவே

கூடாது. குழந்தை முலை யுண்ணும் வரையில் புருஷனிடம் சேருவது பெரும் பிழை.

பாலருக்கு ஏதேனும் சிறிது அசௌக்கியம் உண்டானவுடனே தகுந்த பரிஹாரம் செய்ய வேண்டும். தாய் தந்தையர் குழந்தைக்குண்டான அசௌக்கிய நிலைமைக்கு ஏற்ற பரிஹாரம் செய்ய உடனே முயற்சி செய்யாமல் கால தாமஸம் பண்ணுவதாலும், வைத்தியர்கள் வேண்டியவளவு ஊக்கங்கொள்ளாமலிருப்பதாலும் சிறிய ஆரோக்கியக் குறைவும் மிகப் பெரியவியாதியாக முதிர்ந்து விடுகிறது. சிறு குழந்தைகளுக்குண்டாகும் ரோகங்களை உள்ளபடி பரீக்ஷை செய்து அறிந்து கொள்வது வைத்தியர்களுக்கு மிகவும் கஷ்டஸாத்தியமாயிருக்கிறது. பாலர்களுக்கு உண்டாகும் ஸமஸ்த ரோகங்களுக்கும் பெரும்பாலும் இரைப்பையின் கோளாறே காரணமாகின்றது. தாயினுடைய தகாத விதமான ஆஹாரவகைகளும் ஆசாரங்களும் கூட குழந்தைகளின் ஆரோக்கியக் குறைவுக்கு முக்கியமான காரணங்களே. குழந்தைகளுடைய வயிற்றிலுள்ள மலங்களைக் கழியச் செய்யவேண்டுமானால் ஒரு பாலடை ஆமணக்கெண்ணெயைவிட மேலான மருந்து கிடையாது; மேலும் ஆமணக்கெண்ணெயைப் போட்டுவதால் குடலைப்பற்றிய அனேக ரோகங்களும், இதர அவயவங்களைப் பற்றிய பற்பல வியாதிகளும் ஸ்வஸ்தமாகின்றன. வெகு காரமுள்ள ஔஷதங்களையும் இங்கிலீஷ் மருந்துகளையும் பேதியாவதற்காக அநாவசியகமாய் அனேகர் சிறு குழந்தைகளுக்குப் போட்டுகிறார்கள். அவ்விதம் செய்வதில் குணமில்லாததுடன் பல துர்க்குணங்களும் உண்டாகுமாகையால், அவ்வாறு விஷயமறியாமல் சிகித்ஸை செய்வதை நான் முற்றிலும் அங்கீகரிக்க வில்லை. இரஸகர்ப்பூரம் (Calomel), பேதிக்கிழங்கு (Jalap), க்ரிமிப்பொடி (Santonin), ப்ரோமைடுகள் (Bromides), சோர்வாளம், சிவதைவேர், இந்துப்பு இவைகளைக் குழந்தைகளுக்குக் கொடுக்கவே கூடாது. நிலாவாரை, கிருஷ்ணலவணம் என்கிற கரியுப்பு, சிறுதிப்பிலி, நெல்லிக்கனி இவை குழந்தைகளுக்கு ஏற்ற விரேசநௌஷதங்களென்றும், "தசமாதாஹரீதகீ"—கடுக்காயானது பத்துத் தாய்களுக்கு ஸமானமானதால் அது இன்னும் சிறந்ததென்றும் ஆயுர்வேத வைத்தியர்கள் சொல்வதை நான் அநுபவத்தைக் கொண்டு வாஸ்தவமெனக் கண்டறிந்தேன்.

நான் இவ்விஷயங்களைப் பற்றி இங்கு வெகு சுருக்கமாகத்தான் எழுதினேன்; ஆனால் இவ்விஷயங்களைக் கருத்துடன் கவனித்து ஒவ்வொரு தாய் தந்தையரும் வைத்தியரும் நடந்து கொண்டால் ஆயிரக்கணக்கான குழந்தைகளை அகாலமரணத்தினிடமிருந்தும் தப்பவைக்கலாமென்பது எனது துணிபு.

PRACTICAL METHODS OF PURIFICATION OF DRUGS.

ஔஷதச் சரக்குகளின் சுத்திமுறை.

BY
Mr. V. S. AIYAN PILLAI
VAIDYAR.

வைத்தியங் கற்கப் புகுவோர்க்கு நன்கு பயன் தரத் தக்கவையான ஔஷதச் சரக்குகளின் சுத்தி முறைகளைப்பற்றி நான் எழுதத் தொடங்கு முன்னர், அடியிற் கண்ட சில விஷயங்களைச் சொல்லப் பிரியப்படுகிறேன்.

இந்தியாவின் புராதனமான மற்றத் தொழில்களை நசித்துக் கொண்டே வரும்படி செய்யக் காரணமாயிருந்ததெதுவோ அதுதான் வைத்தியத் தொழிலையும் இந்தக் கதிக்குக் கொண்டு வந்து விட்டது. அதன் விரிவை அறிஞர்கள் தற்காலம் உணர்ந்து விட்டார்களாகையால் இங்கும் எழுதல் மிகையாகுமென் றெண்ணுகின்றேன். ஆயினும் இதைச் சொல்லாதிருக்க முடியவில்லை; ஆங்கிலக்கல்வி அதிகமாகவாக, கூரிய மதியுள்ள நமது இந்

திய மக்களி லனேகர் புராதன இந்து வைத்தியாப்யாஸத்தை அறவே விட்டொழித்து ஆங்கில வைத்திய வித்தையையே நன்கு பயிலத் தொடங்கி விட்டமையால், இந்து வைத்திய வித்தை பிரகாச மின்றி மேக படலத்தால் மறைப்புண்ட சந்திரன் போலாய் விட்டது. ஆங்கில வைத்தியம் ஒன்று மாத்திரம் இன்னும் எவ்வளவு பிரபலமாக ஆயினும், நம் தேசசீதோஷ்ண நிலைமைக்குத் தக்கபடி ஆங்கில மருந்துகளை உருமாற்றி யமைக்கும் வரை நாம் ஸுகப்படுவது ஸாத்திய மல்ல. அவ்வாறு ஆங்கில மருந்துகளை நமக்கிசையத் திருத்தியமைப்பதும் எளிதான காரிய மல்ல. அதை அமைக்க முயல்வாரு மிலர். ஆதலால் ஏற்பட்டுள்ள ஆங்கில மருந்துகளில் நமக்கொத்தவைகளைக் கொண்டும், இந்து மருந்துகளெல்லாவற்றையுங் கொண்டுதான் நாம் பிழைக்க வேண்டி யிருக்கின்றது. இந்து மருந்துகள் கேவலம் அறியாமையால் உண்டாக்கினவல்ல. மஹா மேதாவிகளால் நமக்கருளிய பரமாம்ருதமே யாகும். இதன் லாக்கியத்தை அனுபவித்த வரே யறிவர். எத்தனையோ ஆங்கில வைத்தியர்களால் கைவிட்ட ரோகங்களைக் கல்வி யறிவில்லாக் கசடனென்று வனனுஞ் செய்யத் தகுந்த பட்டிக்காட்டானொருவன் வெகு எளிதாகத் தீர்த்து வருதலை நாம் கண்ணாரக் காண்கிறோம். இவ்வளவு பிரயோஜனகரமான இந்து வைத்தியம் மேற் சொன்னவாறு கீழ் நோக்கி வருதலை யுணர்ந்த ஸ்ரீமான் வைத்தியரத்ன பண்டித டி. கோபாலாசார்லு அவர்கள் எடுத்துக்கொண்ட நன் முயற்சியின் பயனால் இப்போதுதான் ஆயுர்வேத பூஷண பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார் மூலமாக ஒரு வைத்திய கலாநிதி யென்னும் மாதாந்தப் பத்திரிகை யேற்கும் பாக்கியவான்களாயினோம். இப்பத்திரிகையை நடத்த முயன்றுள்ள அதிபரவர்கள் படிப்போர்க் கவசியமாவன இன்னனவென மதித்து அவற்றைக் கிரமப்படுத்தி யெழுத வல்ல நுட்பமும் பல பாஷைகளில் விற்பத்தியும், பெரு முயற்சியும், பிறவன்மைகளும் நிறையப் பெற்றுள்ளவர்களா யிருத்தலால், நாளடைவில் நம் இந்து வைத்தியம் சற்று மேனோக்கி வளர்ந்து பெரும்பயன் தருமென்னுந் திடங்கொள்ளற் குரியவர்களாகிறோம். விஷய தானஞ் செய்வோரும் பெரும் பட்டதாரிகளும் மேதாவிகளுமா யிருத்தலால், ஆங்கில இந்து யூனானி வைத்திய நுட்பங்களை இவ்வொரு பத்திரிகை வாயிலாகவே எளிதிலுணர்ந்து அடைதற் கரிய நவீன வைத்திய ஞானத்தையும் வேண்டிய வளவு பெறுவோம். இவ் வைத்திய கலாநிதி நாளுக்கு நாள் அபிவிருத்தியாகி நற்பயன் விளைவிக்கு மாறு எல்லாம் வல்ல இறைவனைப் போற்றுவோமாக.

வைத்தியர்கள் முதலில் தெரிந்து கொள்ள முயலும் பிரதான விஷயங்களில் சரக்குகளின் சுத்தி முறையும் ஒன்றாம். இச்சுத்திக் கிரமத்தை நேரே நூலிலிருந்து கற்றுக்கொள்ள எங்கும் இயலாதென்பது நிச்சயம். எல்லாச் சரக்குகளையுந் தொடுத்துச் சொல்லி விட்டோமென்று இறுமாந்து சொன்ன நூலாசிரியரும் எவ்வளவோ விஷயங்களைக் கூறாது விட்டிருக்கிறார்கள். தமிழிலுள்ள வித்த வைத்திய நூல் எல்லாவற்றையும் ஒருங்கே யுணர்ந்த பின்னருங் கூட அனுபவ முள்ளவர்களைக் கண்டு கேட்டே பல விஷயங்களை விளக்கிக் கொள்ள வேண்டி யிருக்கின்றது. அன்றியும் நூல் சொன்னவர்கள் ஒவ்வொருவரும் தாம் தாம் கற்ற நூலின் படியோ, ஆசிரிய பேதத்தாலோ, அல்லது அனுபவ ஞானத்தாலோ ஒவ்வொருவர் சொன்னவும் வெவ்வேறு தரத்தனவா யிருக்கின்றன. இவ்வாறு நேர்ந்துள்ள பெரும் ஸங்கடத்தால் வைத்தியங் கற்கப் புகுவோர் ஆரம்ப விஷயத்திலேயே திடங்கொள்ள வழியில்லாது மயங்குகின்ற

னர். இம் மயக்கத்தோடேயே இவர்கள் வைத்தியர்களாகிப் பலவாறு திண்டாடித் தங்கள் வயது முதிர்ச்சியில் சுயமான அனுபவ ஞானத்தால் ஒருவாறு சுத்திக் கிரமம் இன்னதெனத் தெரிந்துக் கொள்கிறார்கள். இவ்வாறு தெரிவதற்குள் எத்தனையோ முறை ஏமாற வேண்டியிருக்கின்றது. ஸாதாரணமாய் நேர்வாளத்தைச் சுத்திசெய்யும்போது கண்ணெரிவடைந்தோரும், மூக்கு உதடு முதலிய மெல்லிய உறுப்புகள் சிவந்து ஸங்கடப்பட்டவரும் எத்தனைபேர்! சேங்கொட்டையாற் படுங் கஷ்டங்களை யெழுதினால் அனுபவித்தோர்க்கு நகைப்பு வரும். நாபியை ஊறவைத்தோ வேகவைத்தோ அவைகள் நன்றாயுலரு முன் ஔஷதங்களில் சேர்த்து உபயோகிப்பதால் பிணியாளருக்கு நேரிடும் கஷ்டம் எவ்வளவு! கொம்மட்டிக்காய்ப் பேதியாலும் கள்ளிப்பால் பேதியாலும் திகைப் புண்ட வைத்தியர் கணக்கி லடங்குவாரா? மூலிகைகளிலேயே இவ்வளவு ஸங்கடமென்றால் ரஸ கந்தக பாஷாண இனங்களையும் உலோஹ வகைகளையும் பற்றிப் பேசினால் முடிவுறுமா?

இவை போன்ற கணக்கற்ற அபாயங்களிலகப்பட்டு மனம் வருந்திப் பின்னர் தங்கள் முயற்சியால் அவ்வவற்றிற்குப் பரிஹாரம் தேடப்ரவ்ருத்திக்கிறார்கள். கண்டவற்றைப் புத்தக மாக்காக் குறையாலேயே இந்து வைத்தியம் இவ்வளவு எளிய நிலைமைக்கு வந்துவிட்டது. தெரிந்த ஞானம் அவர்களோடே போய் விடுவதா யிருக்கிறது. இவ்வாறு வளர்ந்து சிதையும் ஞானத்தைப் பலரிட மிருந்தும் ஒருங்கு திரட்டி ஒரே புத்தகமாக்கி விட்டால் அது எத்தனைப் பேருக்குபகாரமாயிருக்கும்! இதற்கு நம்மாற் செய்யப்படும் உபாயந்தானென்ன? என்போமாயின் ஸம்ஸ்கிருத-ஆங்கில-இந்து-யூனானி வைத்திய சாஸ்திர விற்பன்னர் ஒவ்வொருவருந் தத்தம் அனுபவத்தாலும் ஆசிரிய முகத்தாலு முணர்ந்தவற்றை நாம் நிலையாதிருக்கக் கிடைத்த நிதி போன்ற இவ் "வைத்தியகலாநிதியில்" வெளியிட்டுவர வேண்டும். பல்லோரிட மிருந்தும் பல காலுங் கிடைத்தவற்றைக் காலம் வாய்த்த போது கனம் பொருந்திய பத்திராதிபர்கள் புத்தகமாக்கியு பகரித்துப் பெரும் புகழ் பெறவேண்டும். இவ்வொன்றனை மாத்திரமா? முதலிற் சுத்தி முறை, இரண்டாவது ஔஷத முடிக்கு முறை, மூன்றாவது பிரயோகிக்கு முறையாகிய இவற்றையும் பூர்த்திசெய்ய முயல வேண்டும். பின்னைய விரண்டும் மிக்க விரிவான தாயிற்றே! எவ்வாறு முற்று விப்பதென் றெண்ண வேண்டியதில்லை. இவ்விரண்டிலும் இடர்படும் பாகங்களில் மாத்திரம் தாங்கண்ட அனுபவத்தை விளக்கி விட்டாற் போதுமானது. இம் மூன்று விஷயங்களிலும் பண்டிதர் மாட்டுக் கிடைத்த அனுபவங்களைத் திரட்டி 3-புத்தகமாக்கிவிடின் வைத்தியங் கற்போர்க்கு எவ்வளவு பேருதவியாயிருக்கும்! இது காறும் வைத்திய விஷயமாய் ஓர் பத்திரிகையுந் தோன்றினதில்லை. நல்ல அத்ருஷ்டவசமாய்த் தற்காலந்தான் வாய்க்கப் பெற்றோம். கிடைத்துள்ள இந்த ஒப்பற்ற சுபகாலத்தை வீணாக்காமல் பண்டிதர்கள் அரிய முயற்சியாற் கண்டவற்றைத் தத்தம் உள்ளத்திலேயே புதைத்து வையாமல் சிரமம் பாராது பரோபகாரத்தை யெண்ணி விஷயதானஞ் செய்து, லோகோபகாரிகளாகக் கடவீர்களெனப் பிரார்த்திக்கின்றேன்.

விரிவஞ்சி இந்த மாதம் மேல் விஷயங்களை நிறுத்தி அடுத்தமாத முதல் எழுதிவர இருக்கின்றேன்.

THE TEETH AND THEIR [illegible]

பற்களும் அவற்றின் உப[illegible]ம்.

BY

Dr. M. MANICKAM

Physician and Su[illegible]

பல்லானது பிராணிகளி[illegible]குள் முக்கியமான ஒரு கருவியா[illegible]மைந்திருக்கின்றது. பெரும்பாலும் [illegible] பிராணிகளுக்கும் பற்கள் இன்றிய[illegible]வையாம். பற்கள் இல்லாவிடில் முகத்[illegible]யும் அமைப்பின் ஒழுங்கும் குலைந்[illegible]க யாவரும் அறிந்திருக்கின்றனர். [illegible] விழுந்து விட்டால் இளம்பிராயத்[illegible]விருத்தர்களைப் போல் காணப்படுகி[illegible]லவா? பேசும் பொழுது எழுத்துக்க[illegible]கு உச்சரிப்பதற்குப் பற்கள் ஏற்ற [illegible]யாய் அமைந்திருக்கின்றன; பல்லி[illegible] ஸ்பஷ்டமாகப் பேசுவது கஷ்டம். [illegible] இரண்டும் விகாரமாய் உள்ளடங்கி[illegible]ன. ஆகையால் முகத்திற்கு இயற்கை[illegible] மாறி வேறு பாடுண்டாகும். ஒரு பல்[illegible]காலும் கஷ்டமே. முன்பல் இல்லாம[illegible]ல் முகம் பார்க்க வழங்குமா? இக்[illegible] ஸாதாரணமானவை. இவைகளில் ல[illegible]ஞல் தேஹாரோக்கியத்திற்கு உண்[illegible] குறைகளே வெகு முக்கியமானவை. [illegible]களின் இயற்கை நிலைமைகளைப்பற்றி [illegible] சிறிது விவரித்து விட்டு, அப்பால் [illegible]வைகளைக் கூறுவது உசிதம்.

[illegible] தேஹத்தி லேற்பட்ட முக்கியமான [illegible]களில் ஒன்றென்பது இவ்வியாஸத்தை [illegible]லும் படிப்பதால் தெரியவரும். எந்தெந்[illegible]ல் எவ்வெவ்விதமான பற்கள் உற்பத்[illegible]கின்றன வென்றும், எவ்வெவ்வாறு உப[illegible]கமாகின்றன வென்றும் அறியவேண்டும். [illegible] குழந்தைகளுக்கு அதாவது 7 - மாதம் [illegible] 2-வயது முடியும் வரையில் 20-பற்கள் முளைத்து, அவற்றின் உதவியினல் தான் குழந்[illegible]கள் தாம் சாப்பிடும் வஸ்துக்களை ஜீர்ணம் செய்து கொள்கின்றன. இவை உற்பத்தியாவதற்கு முன் குழந்தைகளுக்கு ஸாதாரண அன்னம் முதலிய உணவுகள் ஜீர்ணமாகமாட்டா; இவ்வயதில் அவ்வித உணவுகள் உபயோகிக்கப்படுமானல் குடலைப்பற்றிய பற்பல வியாதி உண்டாகும். குழந்தைகளுக்குப் பல் முளைப்பதற்கு முன் மாப்பண்டங்கள் எதுவும் கொடுக்கக்கூடாதென்று சொல்லுவதற்குள்ள முக்கிய காரணங்களுள் இதுவும் ஒன்றும். இரண்டு வருடங்களுக்குப் பிறகு ஸ்திரமான பற்கள் முளைக்க ஆரம்பிக்கின்றன. குழந்தைப் பருவத்தில் உற்பத்தியாகிற 20-பற்களுக்கும் பால் பற்கள் (Milk teeth) அல்லது அஸ்திரப்பற்கள் (Temporary teeth) எனப் பெயர். இப்பற்கள் குழந்தைகளுக்கு 7-வது மாதம் முதல் கிரமமாக அந்தந்த வயதிற் கேற்றவாறு 36-வது மாதம் வரையில் ஜதை ஜதையாக முளைத்துக் கொண்டே வருகின்றன. பிறகு $6\frac{1}{2}$-வருஷம் முதல் 21-வது வருஷம் வரையில் வரிசைக் கிரமமாகப் பால் பற்கள் விழுந்து, அந்த ஸ்தானங்களில் ஸ்திரப்பற்கள் (Permanent teeth) முளைத்து வரும். மேல் வரிசையில் 16-ம், கீழ் வரிசையில் 16-ம் ஆக 32-ஸ்திரப் பற்கள் உண்டு. மேல் வரிசையில் நடுவில் 4-பற்களும் கீழ்வரிசையின் நடுவில் 4-பற்களும் இன்ஸைஸார் அல்லது முன்பற்கள் எனப்படும்; இவை உணவுப் பொருட்களை வெட்டுவதற்கு அல்லது கத்திரிப்பதற்கு உதவும். இவற்றில் மேல் வரிசையிலுள்ள நான்கு முன்பற்களும் மிகவலிவுள்ளனவாகவும், நீண்ட வேர்களுடன் கூடியவைகளாகவும் பலமாய் அழுந்தியிருக்கின்றன. மேல்வரிசையிலுள்ள இப்பற்களால் பதார்த்தங்களை மேன்மேலும் அடிக்கடி மெல்ல வேண்டியிருப்பதால், கீழ் வரிசை முன்பற்களைவிட மேல்வரிசை முன்பற்கள் அவ்வளவு வலிவுள்ளவைகளாகவும் உருவத்தில் விசாலித்தவைகளாகவும் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு அடுத்து கீழே இரண்டு

(நாலு முன்பற்களுக்கும் வலது பக்கத்தில் ஒன்று, இடது பக்கத்தில் ஒன்று) கோரப்பற்களும், அவ்விதமே மேலே இரண்டு கோரப்பற்களுமுண்டு; இவை நாய்ப்பற்களைப் போலிருப்பதால் ஆங்கிலத்தில் காினன் டீத் (Canine teeth) எனப்படுகின்றன. இவை வெகு கூர்மையாயிருப்பதால் உணவுப் பொருட்களைக் கடித்துக் கிழிப்பதற்கு உதவுகின்றன. இவற்றிற்கு அடுத்தவை கடைவாய்ச் சிறிய பற்கள் (Bicuspids); இவை மேல்வரிசையில் 4, கீழ்வரிசையில் 4-ஆக எட்டாம். இவற்றில் ஒவ்வொன்றுக்கும் இரண்டிரண்டு வேர்கள் உண்டு. இவை மேற்கூறிய கூரான மற்றப்பற்களைவிட சிறியவையாகவும், வலிவுள்ளவைகளாகவும் இருக்கின்றன; இவற்றிலும் மேல் வரிசைப் பற்கள் கீழ்வாய்ப்பற்களைவிட பெரிதாகவும், வேர்கள் நன்கு வெவ்வேறாகப் பிரிந்தும் காணப்படும். இவற்றிற்கு அடுத்தவை கடைவாய் பெரிய பற்கள் (Molars or Grinders); இவற்றை அரைக்கும் பற்களென்றும் சொல்லலாம்; கீழும் மேலும் சேர்ந்து மொத்தம் 12-பெரிய கடைவாய்ப்பற்கள் உண்டு. இவை உணவுகளை மென்று வழுமுட்ட மிகவும் உபயோகமானவை. மேல்வரிசையிலுள்ள ஒவ்வொரு கடைவாய்ப்பல்லும் ஐந்து பிறைக் கோடு (Cusps or Tubercles) உள்ளதாகவும், கீழ்வரிசையிலிருப்பவற்றில் ஒவ்வொன்றும் நாலு பிறைக்கோடுள்ளதாகவும் இருக்கின்றன. இவற்றுள் முதற் பல்லானது இதர பற்களைவிடப் பெரிதாயும் அகன்றதாகவும் இருக்கின்றது. இவற்றுள் மேல் வரிசையிலிருக்கும் கடைவாய்ப் பற்களுக்கு மூன்று வேர்களும், அடியிலிருப்பவைக்கு இரண்டுவேர்களுமுண்டு. கடைவாய்ப் பற்களில் மூன்றாவதுக்கு ஞானப்பல் என்று பொருட்படுமாறு ஆங்கிலத்தில் விஸ்டம் டூத் (Wisdom tooth) என்று பெயர். உலக நடவடிக்கைகளை அறிந்து நடக்கக் கூடிய வயதில் உண்டாவதால் இதற்கு இப்பெயர் வந்தது. ஒவ்வொரு பல்லையும் மூன்று பாகமாகப் பிரிக்கலாம். அதாவது— பல்லின் முனையானது சிகரம், (Crown) என்றும் மத்திய பாகமானது கண்டம் (Neck) என்றும் வேரின்பாகம் மூலம்(Root or Fga) என்வும் கூறப்படும்.

பிராணிகள் திடசரீரிகளா யிருப்பதற்கு உணவு தான் மிக முக்கியமானதென்று நாம் சொல்ல வேண்டியதில்லை. அவ்வுணவுகள் பலவாறாக இருக்கின்றன. சில உணவுகள் கடினமாகவும், சில மிருதுவாகவும், சிலது சீக்கிரம் ஜீர்ணமாகக் கூடாமலும், வேறு சில எளிதில் ஜீர்ணமாய் இரத்தத்துடன் ஸுலபமாய்க் கலக்கக் கூடியவைகளாகவும் இருக்கின்றன. திரவமாக இல்லாத எந்த வஸ்துக்களையும் உட்கொள்ள வேண்டுமானால் முதலில் வாயிலிட்டவுடனே அவற்றைப், பற்களின் உதவியினால் நன்றாக மென்று, பிறகு உமிழ்நீருடன் கலந்து நாக்கினால் குழப்பி அப்பால் விழுங்கவேண்டியிருக்கிறது. எந்த வஸ்துக்களும் பெரும்பாலும் பற்களால் கடித்துக் குழப்பப்படாமற் போனால் தேஹத்தைத் தகுந்த வாறு போஷிப்பதற்குப்பயன்படா. கடினமான வஸ்துக்களையெல்லாம் கடித்து நன்றாக வழுவழுப்பாகச் செய்தாலொழிய, உணவுகளிலுள்ள ஸத்துக்களைக் குடல் முதலிய உள்ளவயவங்கள் நன்றாகக் கிரஹிக்க முடியாது. மேலும் மாம்ஸபக்ஷணம் செய்பவருக்குப் பற்கள் இல்லாவிடில் அவற்றைப் புசிக்க முடியாது. பதார்த்தங்களைக் கடித்து மென்று உண்பதால் அவ்வுணவுகளுக்குள்ள சுவையை நாக்கு நன்றாக அறிவதுடன், அவ்விதம் மென்று விழுங்கப்படும் உணவே நன்கு ஜீர்ணமாகின்றது. இப்பற்கள், உணவுகளை மென்று விடுவதால் குடல் முதலிய உள்ளவயவங்களுக்கு நன்கு ஸஹாயம் செய்கிறது; அதாவது, உண்ணும் வஸதுக்களை முதலில் நன்றாகக் கடித்து மென்று விழுங்கினாலொழிய, இரைப்

பையானது தனது வேலையை சரியாகச் செய்யமாட்டாது; நன்குமென்று விழுங்கப்படும் உணவுகள் இரைப்பையில் போனவுடன், அங்கு உற்பத்தியாகும் ஆமாசயத்திரவம் (Gastric juice) என்கிற நீருடன் கலந்து, மறுபடி இரப்பையினால் அவ்வுணவு எளிதில் கடையப்பட்டு ஒருவாறு குழம்பாக ஆவதற்கு ஸௌகர்யம் ஏற்படுகிறது. பற்களால் கடிக்கப்படாத பதார்த்தங்கள் இரப்பையில் விழுந்தால், அவை இரைப்பையினால் பக்குவம் செய்யப்படாமல் குடலிலும் விழுந்து, அங்கும் ஜீர்ணமாகாமல் குடல்களுக்குத் துன்பமளிக்கக்கூடியவைகளாகும்; என்றால் கடித்து மெல்லாமலே விழுங்கப்படும் உணவு குடலில் ஜீர்ணமாகாமல், அதன் ஸத்து இரத்தத்தில் சேர வகையில்லாமல், உட்கொண்ட வஸ்து குடலில் வலிமுதலியதை உண்டாக்கிக்கொண்டு அவ்விதமே மலத்துடன் வெளிவந்து விடுகின்றது. பற்களால் கடிக்காமலே கடினமான உணவுகளை எவ்வளவு சாப்பிட்ட போதிலும் அவற்றால் சரீரம் சிறிதும் போஷிக்கப்படமாட்டாதாதலால், தேஹம் நாளுக்கு நாள் மெலிவடைந்து வரும். இவற்றையெல்லாம் நன்கு ஆலோசிப்போமாயின், பற்களைப் பாதுகாக்க வேண்டிய விஷயத்திலும், அவை நோய் கொண்டால் அல்லது விழுந்துபோனால் தகுந்த பல்வைத்தியர்களிடம் சென்று அவற்றிற்குப் பரிஹாரம் செய்து கொள்ள வேண்டிய விஷயத்திலும் ஜனங்கள் ஊக்கமுள்ளவராயிருப்பது அவசியம்.

இப்பொழுது சிறந்த யோக்கியதையுள்ள பல்வைத்தியர்கள் பற்களின் நோய்களை நிவ்ருத்திப்பதற்கும், விழுந்துபோன சில பற்களை அல்லது எல்லாப் பற்களையும அவரவரது வாயின் அளவெடுத்து ஒழுங்காகச் செயற்கைப்பற்கள் (Artificial teeth) அமைக்க சரிப்படுத்தவும் உபாயங்களைக் கண்டறிந்திருக்கின்றனரென்பதை அனேகர் அறிந்திருக்கின்றனர். இதற்காக இப்பொழுது செயற்கைப் பற்கள் வார்க்கப்பட்டு இயற்கைப் பற்களிலும் வெகு மனோஹரமாகவும் உபயோகமுள்ளவையாகவும் கட்டப்படுகின்றன. பற்களுக்குக் கெடுதியுண்டாகாமலும், நோய் கொண்ட பற்களைத் தகுந்த சிகித்ஸையினால் சீர்படுத்திக் கொண்டும், விழுந்துபோன பற்களுக்குப் பதிலாகச் செயற்கைப்பற்களைக் கட்டிக் கொண்டும் அப்போதைக்கப்போது பற்களைப் பாதுகாத்து வந்தால், குடலின் கோளாறுகளாலுண்டாகக்கூடிய அனேக ரோகங்களிடமிருந்து தப்பிக்கொள்ளலாம். ஆனால் செயற்கைப்பற்களை அமைத்துக்கொள்வதில் ஆசாரக்குறைவு நேரிடுமென்று வைதிகர்கள் ஸந்தேஹப்படக்கூடும். அவ்விதம் ஸந்தேஹப்படுவதற்கும் வழியில்லையென்பது எனது அபிப்பிராயம். ஏனெனில், செயற்கைப்பற்கள் எலும்பு முதலியவற்றால் நிர்மிக்கப்[illegible]னால் அவ்விதம் நினைக்கலாம். இப்பொழு[illegible] உள்ள சில மட்பொருட்களைக் [illegible]) கொண்டு கண்ணாடி முதலியவை [illegible]படுவது போலவே, பற்பல உ[illegible]க்களைக் கொண்டு இப்பற்களும் வார்க்[illegible]கின்றன. இவற்றை தினந்தோறும் கழு[illegible] பாத்திரங்களைப்போலவே சுத்தி செய்து [illegible]யோகிக்கலாம். ஆகையினால் ஆ[illegible]ரக்[illegible]வு நேரிடுவதற்கில்லையென்பது [illegible]மல்லவா? இச்செயற்கைப் பற்க[illegible]போன பற்களுக்குப் பதிலாக உப[illegible]தால் முகத்திற்கு ஒருவிதமான சே[illegible]த் தருவதுமல்லாமல், எவ்விதமான [illegible] வஸ்துக்களையும் நன்றாகக் கடித்து [illegible]று ஸாப்பிடுவதற்கும், வாய் கு[illegible]பேசுவதற்கும் அனுகூலமாயிருக்[illegible]டொரு பற்கள் வீழ்ந்து போனா[illegible]ற்குப் பதிலாகவும் செயற்கைப் பல்[illegible]காள்வது மிகவும் அவசியம்; இவ்

லாவிடில், ஒரு பல் போனதால் மிகுந்துள்ள பற்களும் கிரமமாக பலங்குன்றி கோளாறடைந்து காலக்கடையில் விழத் தலைப்படும். இரண்டொரு பல் விழுந்துவிடுவதாலும் முகம் விகாரமடையுமாதலால் அவ்வித விகாரத்தைப் போக்கவும், உணவுகளை நன்கு ஜீர்ணமாவதற்கேற்றபடி மெல்லுவதற்கும், நல்ல நிலைமையிலுள்ள மற்றப் பற்களைக் காப்பாற்றுவதற்கும் விழுந்துபோன பற்களின் ஸ்தானத்தில் செயற்கைப் பற்களை அமைத்துக் கொள்வது இன்றியமையாததாகும். பற்கள் வியாதிகொண்டால், காது தொண்டை முதலிய அவயவங்களிலும் சில ஸமயம் கோளாறுண்டாவதுண்டு; அவ்விதம் காது தொண்டை இவற்றில் வியாதிகள் உண்டாயிருக்கும் போது அப்பிணியாளிகள் அவ்விஷயங்களில் விசேஷ பரிசயம் பெற்ற வைத்தியர்களிடம் செல்லுகையில், அவ்வைத்தியர்கள், நோய் கொண்ட பற்களைப் பிடிங்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக செயற்கைப்பற்கள் வைத்து கட்டிக் கொண்டால் தான் காது தொண்டைகளிலுண்டாகும் வியாதிகளையும் ஸ்வஸ்த்தம் செய்யக்கூடுமென்று சொல்வது வழக்கம். ஆனால் எளியவர் இவ்விதம் பல்கட்டிக் கொள்வது கஷ்டமென்று சொல்லலாம். சீமையில் பல்வைத்தியர்கள் கீழ் மேல் வரிசைகளிலடங்கிய பற்கள் முடியவும் கட்டுவதற்கு சுமார் 300-முதல் 350-ரூபாய் வரையில் சார்ஜ் செய்கிறார்கள், ஒரு பல் கட்ட வேண்டுமானால் பல் ஒன்றுக்கு 10-முதல் 20-ரூபாய் வரையில் சார்ஜ் செய்யப்படுகிறது. ஆனால் இத்தேசத்தில் இப்பொழுது அநேக பல் வைத்தியர்கள் செயற்கைப் பற்களுக்கு வேண்டிய ஸாமான்களை வரவழைத்துக் கூடியமட்டிலும் ஏழைகளுக்கும் சிறிது ஸௌகரியமாயிருக்கும்படி ஒழுங்காகவே பற்கட்டும் வேலையைச் செய்து வருகின்றனர். பற்களின் மேற்பாக அமைப்புகளைப் பற்றியும், அவை கோளாறடைந்தால் அவற்றின் பேதங்களைப் பற்றியும், செயற்கைப்பற்களை உபயோகிப்பதைப் பற்றியும் இப்பொழுது ஒருவாறு ஸங்கிரஹமாகக் கூறப்பட்டது. மற்ற விவரங்களைப்பற்றி இனி வரும் ஸஞ்சிகைகளில் விவரிப்போம்.

THE ABUSE OF TOBACCO.

புகையிலையின் துர்க்குணங்கள்.

BY

Dr. E. SMITH.

புகையிலையானது பிரபஞ்சமெங்கும் விசேஷமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. இது மயக்கமுண்டுபண்ணும். புகையிலை வருஷந்தோறும் 30-லக்ஷம் டன்கள் (ஒரு டன் 90-மணங்கு இருக்கும்) பயிராக்கப்படுகிறது. அமெரிக்கா யுனைடெட்ஸ்டேட்டில் ஆறு லக்ஷம் ஏகரா விஸ்தாரமுள்ள பூமியில் புகையிலை பயிரிட்டு சேகரிக்கப்படுகிறது.

கவர்ன்மெண்டுக்குப் புகையிலையினால் 1909-ம் வருஷத்தில் வசூலான வரி 57,889,351-டாலர்களாம் (சற்றேறக்குறைய ஒருவராகன் கொண்டது ஒரு டாலர்). இதற்கு முன் வருஷத்தை விட இவ்வருஷத்தில் 60,02,473-டாலர்கள் அதிகமாய் வசூலாயிருக்கின்றன. எல்லாவற்றையும் விட விசேஷமாக ஸிகரெட் என்கிற சுருட்டில் திரவ்யாபிவிருத்தி காணப்படுகிறது. அவ்வருஷத்தில் 1,766,583,714-சுருட்டுகள் தயார் செய்யப்பட்டன. 1910-ம் ௵ ஆகஸ்டு ௴ 27-லிடரெரி டைஜஸ்டு என்னும் பத்திரிகை 7,874,300,329-ஸிகரெட்டுகளுக்கு வரி வசூல் செய்யப்பட்டதாக எழுதுகிறது. சுருட்டுகளின் கணக்கு இன்னும் அதிகமாகவே காணப்படுகிறது. அவ்வருஷத்தில் 8,139,934,344-சுருட்டுகள் தயாரானவை. சுருட்டுகள், ஸிகரெட்டுகள் இவைகளைத் தவிர்த்து மேல்

* ஹெரால்ட் ஆப் ஹெல்த் என்னும் வைத்தியப் பத்திரிகையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.

...வதற்கு உபயோகிக்கப்படும் புகையிலை ...ளின் கணக்கு வேறு. அமெரிகா தேசத்தில் ...திவருஷமும் சற்றேறக்குறைய 32,00,000, ...வுன் விலையுள்ள அவ்வளவு மூக்குப்பொடி ...றிஞ்சப்படுகின்றது.

ஆர்ய ஜாதியைச் சேர்ந்த முற்காலத்திய சில ...நாகரிக ஜனங்களால் புகையிலை உபயோகிக்கப்பட்டு வந்து, அப்பால் கிரமகிரமமாக ...ரோப்பாவிலும் இவ்வழக்கம் பரவி ...ந்ததாகக் கூறுகின்றனர்; அதற்கு வெகு ...காலம் முன்பாகவே சீன தேசத்தில் இது உபயோகிக்கப் பட்டு வந்ததாகவும் சிலர் அபிப்ராயப்படுகின்றனர். உலகத்தில் இப்பொழுது ...ப்பாகத்திலும் இது மிகுதியாக உபயோகிக்கப்பட்டு வருகிறதென்றாலும், இதனால் உண்டாகும் பிரயோஜனம் விசேஷமாகக் காணப்படாமல் தீமை மாத்திரம் அதிகமாயுண்டாகின்றதென்பதில் ஸந்தேஹமில்லை; ஆகவே ...ர்க்குணமுள்ள இவ்வஸ்துவைக் கண்டறிந்து ...லகத்தில் உபயோகிப்பதற்கு வழக்கப்படுத்தினவர் எந்த ஜாதியாராக இருந்த போதிலும், ...வர்களை நாம் கௌரவிப்பதற்கில்லை.

புகையிலை யுபயோகிப்பதால் இரத்த நாடிகள் மிகவும் கெட்டியாகப் போகும்; கண்களின் மத்தியிலுள்ள திருஷ்டியும் மந்தமாகப் போகும்; ஹ்ருதய ஸம்பந்தமான வியாதிகள் உண்டாகும். இப்புகையிலையை வழக்கமாயுபயோகிக்கும் சிலருக்கு காக்கை வலியைப் போன்ற வாதரோகம் உற்பத்தியாவதும், அவ்வழக்கத்தைப் பரிஹரித்து விட்டால் அவ்வியாதி குணப்படுவதுமுண்டு. இது மனதைக் கெடுத்து விடுகின்றது. சிறு பிராயம் முதல் கிழத்தனமுண்டாகும் வரையிலும் சரீரம் நன்கு செழித்து வளருவதற்கு இப்புகையிலை இடையூறுண்டுபண்ணும். விசேஷமாய் சுருட்டு உபயோகிப்பதால் ச்வாஸத்தடை, க்ஷயகாஸம், நரம்புகளில் அபரிமிதமான நோய், வாய்க்குள்ளும் நாக்கிலும் க்ஷததோஷ ஸம்பந்தமான புண்கள், மூர்ச்சை இவை உண்டாகும். கருணைக்கடலான கடவுள் நாமனைவரும் வேண்டியளவு ச்வஸிப்பதற்கென்று அளித்தருளிய மிகவும் சுத்தமான காற்றிற்கு ஒரு துர்வாஸனையையும், ஆரோக்கியக்குறைவுக்குக் காரணமான துர்க்குணத்தையும் உண்டாக்கும் இப்புகையைக் கலந்து பாழாக்குவது நியாயமல்ல. இதனாலேயே அனேகம் ஜனங்கள் சேருமிடத்தில் புகைச்சுருட்டைப்பிடிக்கக்கூடாதென்பார்கள்.

ப்ரெஞ்சு கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு ஸங்கத்தார், எல்லா வயதுகளிலும் விசேஷமாய் யௌவனவயதில் புகையிலை சரீரத்திற்கு மிகவும் தீங்கை யுண்டுபண்ணும் அபாயகரமான வஸ்து என்று விஸ்தாரப்படுத்தியிருக்கின்றனர். புகையிலையின் உபயோகத்தினால் ஹ்ருதயத்தில் ஒருவிதமான வலியுண்டாகும். புகையிலையை மெல்லுவதாலும், புகையிலைப் பொடியை மூக்கினால் உறிஞ்சுவதாலும் இரைப்பையில் நோவுண்டாவதுண்டு. வாயிலுள்ள மெல்லிய சர்மமும், தொண்டையிலுள்ள மேல் சர்மமும் கிரமமாகக் கெட்டுப்போய், கண்டத்தின் தொனியும் சீரழியும்.

மதுபானஞ்செய்வதற்கு வழக்கப்பட்டவர் அனைவரும் அதற்கு முன் முதலில் புகையிலையை உபயோகிப்பதற்கும் வழக்கப்பட்டவர்களே; என்றால், புகையிலையை உபயோகிக்கும் வழக்கமில்லாதவருக்கு மதுபானத்தில் பிரவ்ருத்தியுண்டாகாது.

புகையிலையை வழக்கமாய் உபயோகிப்பவருக்கு உண்டாகும் தீங்குகளைப்பற்றி அனேக சாஸ்திரஞ்ஞர்கள் விசாரம் செய்து எழுதிவருகிறார்களாகிலும், இந்த துர்வழக்கமுள்ளவர்களுக்கு உண்டாகும் ஸந்தானங்கள் எப்படிப் பட்டவையென்று விமர்சனம் செய்வதற்கு எவரும் முன்வரவில்லை. புகையிலையை உபயோ

கிப்பவருக்கு உண்டாகும் ஸந்தானங்கள் மிக வும் துர்பலமாகவும் அல்லது மந்த புத்திகளா கவும் இருப்பதை நாம் காணக்கூடும். தகுந்த அந்தஸ்திலுள்ள கனவான்களிலும் பலர் புகையிலையை உபயோகிப்பதுண்டு; ஆயினும் எளிய நிலைமையிலுள்ள நீசஜாதி ஜனங்கள் அனைவரும் இதை உபயோகிப்பர்; கூலிவேலை செய்யும் ஜனங்களில் இதை உபயோகிக்காதவரில்லை.

1870-ம் வருஷத்தில் நடந்த ஒரு யுத்தத்தில், தனது தேசத்து ஜனங்கள் ஸிகரெட்டை மிதமிஞ்சி யுபயோகிக்கும் துர்வழக்க முடையவர்களாதலால்தான் யுத்தத்தில் நிற்கமுடியாமல் ஓடிப்போனார்களென்று ப்ரான்ஸு தேசத்தைச் சேர்ந்த ஒரு நிபுணர் எழுதியிருக்கிறார்.

நெருப்புப் பற்றிக்கொண்டு வீடுகள் எரிந்து போகும் அபாயங்களில் 100-க்கு 75-பாகமும் மதிமயங்கி அஜாக்கிரதையுடன் புகைச் சுருட்டைப் பிடிப்பதாலேயே ஏற்படுகின்றது.

புகையிலையின் உபயோகத்தைக் குறைப்பதற்குக் கிரமமாக ஏற்பட்டுவரும் சட்டங்களே இதனால் அதிக கெடுதிகள் உண்டாகுமென்பதை அறிவிக்கின்றன. ஸிகரெட் குடிப்பவருக்குச் சிற்சில உத்தியோகம் கொடுக்கக்கூடாதென்று சட்டங்கள் ஏற்படுகின்றன. மத ஸம்பந்தமான பெரிய அதிகாரத்தைப் பெற விரும்புபவருக்கு அதற்கு முன் புகையிலையுபயோகிக்கும் வழக்கமுண்டா இல்லையா வென்று விசாரிக்கப்படுவதுண்டு. நேப்ராஸ்கா, இல்லினாயின் இந்த யூனிவர்ஸிடிகளில் யூனிவர்ஸிடிப் பிரதேசங்களில் சுருட்டு உபயோகிப்பதற்கு இடம் கொடுக்கமாட்டார்கள். விஷயம் இவ்விதமாயிருக்கையில் வைத்தியத் தொழில் செய்பவரும், வைத்தியசாஸ்திரத்தைப் படிப்பிப்பவரும் இவ்வித துர்வழக்கத்தை அப்போதைக்கப்போது நன்றாகவே கண்டிக்கவேண்டும்.

வைத்திய கலாநிதி.

ப்ரமாதீச ஹு மாசிமீ.

THE METHOD OF PROMOTING THE INDIGENOUS MEDICINE.

இந்திய வைத்திய முறையை விருத்தி செய்யும் வகை.

இந்தியாவில் இப்பொழுது ஆயுர்வேத வைத்திய முறையை விருத்தி செய்து, அதன் மூலமாய் ஆயுர்வேத வைத்தியர்களுக்குச் சிறப்பையும், ஜனங்களுக்கு நன்மையையும் உண்டாக்குவதற்காக இவ்வைத்தியர்கள் கூடி ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு விதமான ஏற்பாடு செய்ய முயன்றிருக்கிறார்கள். வட இந்தியாவில் நாஸிக் என்கிற இடத்தில் "ஆயுர்வேத வித்யாபீடம்" என்கிற ஒரு வைத்திய வித்யாஸங்கம் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இதற்கு கைக்வார் ஆப் பரோடா, தர்ப்பங்கா மஹாராஜா, கொல்ஹாபூர் மஹாராஜா, டாக்டர் ஸர் பாலசந்திர கிருஷ்ண Kt. L. M. J. P, ஆயுர்வேத வித்யாநிதி பண்டித கங்காதர சாஸ்த்ரீ, பிஷக்ரத்ன நந்தலால்ஜீ முதலியவர்கள் அத்யக்ஷராகவும், போஷகராகவும், மற்றும் காரிய நிர்வாஹகர்களாகவும் ஏற்பட்டிருக்கின்றனர். இந்த வைத்திய வித்யா ஸங்கமானது ஆயுர்வேத வைத்திய ஸம்பந்தமான பரீக்ஷைகளை ஏற்படுத்தவும், அப்பரீக்ஷைகளில் தேறியவர்களுக்குத் தகுந்த பட்டங்கள் கொடுக்கவும், பிரஸித்திபெற்ற வைத்திய வித்வான்களுக்கு 'ஆயுர்வேத மார்த்தாண்ட' முதலிய கௌரவப் பட்டங்கள் அளிக்கவும், ஆர்ய வைத்தியாபிவிருத்தி ஸம்பந்தமான மற்றும் பல காரியங்களைச் செய்யவும் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வித உத்தேசங்களுடன் ஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும், இந்த வித்யாபீடத்தினால் ஏதேனும் ஆயுர்வேத பாடசாலையாவது, வைத்திய சாலையாவது, மற்றும் வைத்திய பரீக்ஷாக்ரமமாவது ஏற்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. வைத்தியசாஸ்திரத்தை முறைப்படி கற்பதற்கு வேண்டிய ஸகல அங்கங்களு மமைந்த இரண்டொரு கல்விச் சாலைகளை ஸ்தாபித்து,

அவற்றின் மூலமாய் இராஜாங்கத்தாருக்கு ஒருவாறு திருப்தியை யுண்டு பண்ணினல்தான், ஆயுர்வேத வைத்தியம் இராஜாங்கத்தாருடைய ஸஹாயத்தைப் பெற்று சிறிது முன்னுக்கு வரக்கூடும். இராஜாங்கத்தின் ஸஹாயமின்றி மிகப் பெரிதான இக்காரியத்தில் சில ஜனங்கள் மாத்திரம் சேர்ந்து காரியத்தை எப்படியோ ஸாதித்து விடுவோமென்று நினைப்பது முடிவில் கவைக்குதவாத கருத்தேயாகும். ஆனல் இந்த வித்யாபீடத்தின் உதவியினல் சில வருஷகாலமாக மற்றொரு "ஆயுர்வேத பரிஷத்" ஸ்தாபிக்கப்பட்டு, வருஷந்தோறும் ஒவ்வோரிடத்தில் அப்பரிஷத் கூட்டங்கூடி அநேக விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்து வருகிறது.

அந்தப் பரிஷத்திற்கு "ஆயுர்வேத மஹாமண்டலம்" எனப் பெயர். இவ்வித மஹாமண்டலம் ஒன்று அவசியமென்று நினைத்து, பெருமுயற்சியெடுத்து அவ்விதமே இதை ஸ்தாபிக்க முன்வந்தவர் காலஞ்சென்ற ஆயுர்வேதமஹோபாத்யாய பண்டித சங்கரதாஸ்ஜீ சாஸ்த்ரீ என்பவரே. அப்பொழுது முதலில் இந்த மண்டலத்தில் ஸாமானியமாக சில நியமங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அவை தகுந்தவாறு ஒழுங்காயிருக்க வேண்டுமென்று நினைத்து, சென்ற வருஷத்திற்கு முன்வருஷத்தில் தான் நாலாவது முறை கூடிய மேற்படி மஹாமண்டலத்தில் (The All India Ayurvedic conference) ஒருவாறு சீர் திருத்தப்பட்டன. அப்பொழுது கூடிய வைத்திய மஹா ஸபைக்கு வைத்தியரத்ன கவிராஜ் யோகீந்திர நாத் ஸேன் M.A., M.R.A.S. வித்யா பூஷண என்கிற ஆயுர்வேத வைத்தியர் அக்ராஸனம் வஹித்தார். அதற்கு அடுத்த வருஷத்தில் ஸ்ரீமான் வைத்தியரத்ன பண்டித D. கோபாலாசார்லு அவர்களின் அக்ராஸனத்தின் கீழ் பம்பாயிலும், அப்பால் சென்ற டிசம்பரில் கர்னல் K. R. கீர்த்திகர் I. M. S., E. F. S. &c. அவர்களின் அக்ராஸனத்தின் கீழ் வடமதுரையிலும் இந்த மஹா மண்டலம் கூடிற்று. இவ்வாறு ஐந்தாறு தடவை இந்த மஹாஸபை கூடி ஒவ்வொரு வருஷமும் ஏதேதோ பிரஸங்கங்கள் செய்து பற்பல விஷயங்கள் தீர்மானித்துக் கொண்டு வரப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் ஆயுர்வேத வைத்தியம் நன்கு செழிப்பதற்கு வேண்டிய முக்கியமான காரியம் ஒன்றும் இதன் மூலமாய் நிறைவேறியதாகத் தெரியவில்லை. முன்னால் பஞ்ஜாபில் ஆயுர்வேத வைத்தியம் கவர்ன்மெண்டாரின் ஆதரணையின் கீழ் கற்பிக்கப்பட்டு, அப்படிப்புக்கு அவ்விடத்திய யூனிவர்ஸிடியின் பரீக்ஷையும் ஒன்று ஏற்பட்டிருந்தது. இப்பொழுது நாலைந்து வருஷ காலமாய் பஞ்சாப் மாகாணத்திலிருந்த அந்த ஏற்பாடும் எடுபட்டுப் போய்விட்டதாய் அறிகிறோம். அவ்விதம் யூனிவர்ஸிடி மூலமாய் பஞ்ஜாபில் நடந்து வந்த அப்பரீக்ஷையை எடுத்து விடாமலிருப்பதற்கும், அந்த அப்படிப்பை இன்னும் விருத்தி செய்ய வேண்டியதற்கும் நாஸிக்கிலுள்ள ஆயுர்வேத வித்யாபீடமாவது, ஆயுர்வேத மஹாமண்டலமாவது ஒருவித முயற்சியையும் செய்யவில்லை. கல்கத்தாவிலும், சென்னையிலும், மற்றும் இதர மாகாணங்களிலும் ஸம்ஸ்கிருத காலேஜுகள் இராஜாங்கத்தாரின் ஆதரவைப் பெற்று அநேகம் நடந்து வருகின்றன. அவற்றில் தர்க்கம், வியாகரணம், வேதாந்தம் முதலிய சாஸ்திரங்கள் படிப்பிக்கப்படும்பொழுது வைத்திய சாஸ்திரம் கற்பதற்கு வேண்டிய ஏற்பாடு மாத்திரம் ஏன் செய்யக்கூடாது? தர்க்க வியாகரணாதிகளை விட ஆயுர்வேத வைத்தியசாஸ்திரத்தைப் படிப்பித்தால், படிப்பவருக்கும் ஜீவனோபாயமாவதுடன், ஜனங்களுக்கும் அவ்விதம் படித்த ஆயுர்வேத வைத்தியர்களால் நன்மையுண்டல்லவா? இதற்

காக இந்த ஆயுர் வேத மஹாமண்டலமும், வித்யாபீடமும் தகுந்த முயற்சி யெடுத்துக்கொண்டால், ஸம்ஸ்கிருத காலேஜுகளில் வைத்திய சாஸ்திர போதனைக்கு இராஜாங்கத்தின் ஸஹாயத்தை ஒருவாறு பெறக்கூடும். சென்னையில் ஆயுர்வேத காலேஜும், மைலாப்பூரில் மற்றொரு வைத்திய பாடசாலையும் ஸ்தாபிக்கப்பட்டு, சில வருஷங்களாய் விடாமுயற்சியுடன் வேலை செய்து வருகின்றன. ஆயுர்வேத வித்யாபீடம் கவர்ன்மெண்டாரிடம் ஒருவாறு ஸம்பந்தம் வைத்துக்கொண்டு, கவர்ன்மெண்டின் சிபார்சையும் அனுஸரித்து ஆயுர்வேத காலேஜ் முதலிய வற்றில் பாடக்கிரமங்களை (Syllabus) ஏற்படுத்துவதற்கும், அக்காலேஜ் முதலிய வற்றில் பரீக்ஷைகளை நடத்தி, அவற்றில் தேற்சி பெறும் மாணாக்கருக்கு யோக்யதாபத்திரம் அளிப்பதற்கும் இதுவரையிலும் சிறிதும் பிரயத்னப்படவில்லை. முதலாவது இவ்வைத்தியக் கல்விச்சாலைகளுக்கும், ஆயுர்வேத வித்யாபீடத்திற்கும் ஒருவித ஸப்பந்தம் ஏற்படவேண்டும். வைத்தியப் படிப்பு சொல்லி வைப்பதே இக்கலாசாலை பாடசாலைகளின் தொழிலாகவும், பரீக்ஷை செய்து யோக்யதாபத்திரம் அளிப்பது வித்யா பீடத்தின் கடமையாகவும் இருக்க வேண்டும். இக்கல்விச்சாலைகளுக்கும், வித்யாபீடத்திற்கும் கவர்ன்மெண்டின் மேற்பார்வையும் ஆதரவும் அவசியம்.

இக்காலேஜிலும், வைத்திய பாடசாலையிலும் இதுவரையில் படித்துத்தேறிய மாணாக்கர் அனேகருண்டு. ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஊரில் சுயமாகவே வைத்தியம் செய்து வருகின்றனர். இவர்களுக்கு வேண்டியவளவு ஸஹாயம் செய்பவர் அரிது. பெரியபட்டணங்களைத் தவிர்த்து மற்ற ஊர்களில் இங்க்லீஷ் ஆஸ்பத்திரிகள் கிடையாது; அப்படிப்பட்ட இடங்களில் ஆயுர்வேதமுறைப்படி தர்மவைத்தியசாலைகளை வெகு ஸுலபமாக ஏற்படுத்தலாம். இங்க்லீஷ் ஆஸ்பத்திரிகளுக்குப் பிடிக்கும் செலவில் பத்தில் ஒருபங்குதான் ஆயுர்வேத வைத்தியசாலைக்குப் பிடிக்கும். அவ்விதம் இங்க்லீஷ் ஆஸ்பத்திரி இல்லாத இடங்களில் ஆயுர்வேத தர்மவைத்திய சாலைகளை ஏற்படுத்தினால் ஜனங்களுக்குமிகவும் உபகாரமாயிருப்பதுடன், ஆயுர்வேத கல்விச் சாலைகளில் படித்துத் தேறி ஸஹாயமின்றி சுயமாய் ஏதோ கஷ்டப்பட்டு வேலை செய்யும் ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் அவ்வைத்திய சாலைகளில் உத்தியோகம் கிடைத்து ஒருவாறு அவர்களும் உதவி பெறுவார்கள். இதற்கெல்லாம் ஆயுர்வேத வித்யாபீடமும், ஆயுர்வேத மஹாமண்டலமும், ஆயுர்வேத கல்விச்சாலைகளும் ஒற்றுமையுடன் உழைத்து, அனேக காரியங்களைத் திருப்தி கரமாகச் செய்து, இராஜாங்கத்தாருக்கு இக்காரியங்களைப்பற்றி அப்போதைக்கப்போது ரிபோர்டுகள் அனுப்பிவந்தால் அவர்களிடமிருந்து ஏதேனும் காலக்கிரமத்தில், உதவிபெற முடியாமற் போகாது. இவையனைத்தும் ஒரு புறமிருக்க, ஆயுர்வேத வைத்தியத்தை அபிவிருத்திசெய்வதற்கு மற்றொரு பெரிய காரியம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் அக்காரியத்திற்குத் திரவியம் அபரிமிதமாய் வேண்டியிருக்கும். ஆகிலும் அதற்காகப் பெருமுயற்சி செய்ய வேண்டும். அதாவது:—

இந்தியாவில் ஓஷதிவர்க்கங்கள் அளவற்றவை. இங்கு கிடைக்கிற ஓஷதிகள் அனேகம் சீமைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வர வர ஔஷதங்களாக இத்தேசத்திற்கே வந்து கொண்டிருக்கின்றன. இத்தேசத்திற் கிடைக்கும் ஓஷதிகளின் குணங்களையும், அவைகளை ஔஷதங்களாகத் தயார் செய்ய வேண்டிய முறைகளையும் ஆயுர்வேத வைத்திய நூல்கள் விசேஷமாக முறையிடுகின்றன. இவ்வைத்திய சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள ஔஷதங்களைத் தயார் செய்வதற்காகப் பெரியதோர் ஔஷதசாலை ஏற்படுத்துவதற்கு ஆயுர்வேத வைத்தியர்

...ள பிரயத்னம் செய்யவேண்டும். அவ்வௌஷதசாலை ஏற்படுத்துவதற்கு இலக்ஷக் கணக்கான திரவ்யம் வேண்டியிருந்தாலும், ஆயுர்வேத வைத்தியர்களும், இவ்வைத்தியத்தில் அபிமானமுள்ளவரும் ஒன்று சேர்ந்து, நபர் ஒன்றுக்கு 10 ரூபாய் விதம் ஷேர்கள் வசூல் செய்து ஒரு கம்பெனி ஸ்தாபித்து, அக்கம்பெனியின் மூலமாய் இவ்வௌஷத சாலையை ஸ்தாபிக்க வேண்டும். இந்த ஔஷத சாலையில் முறைப்படி கஷாயங்கள், ஆஸவங்கள், அரிஷ்டங்கள், லேஹ்யம், சூர்ணம், பஸ்மம், மாத்திரைகள் முதலிய எல்லாவிதமான ஔஷதங்களும் தயார் செய்யப்பட்டு, ஆயுர்வேத வைத்தியர்களுக்கும், இதே மூலிகைகளைக் கொண்டு சீமையில் தயார் செய்யப்பட்ட ஔஷதங்களை உபயோகிக்கும் இங்கிலீஷ் வைத்தியர்களுக்கும் வெகு ஸுலபமான விலைக்கு ஸப்ளை செய்யலாம். இவ்வௌஷத சாலை ஏற்பட்டால் வைத்தியர்களுக்கு ஔஷதம் செய்யும் கஷ்டம் நீங்குவதுமல்லாமல், ஒரே ஔஷதத்தை ஒரு வைத்தியர் செய்து முடிப்பது போலவே மற்றவரும் செய்து முடிக்காமல் பலவாறான மாதிரிகளில் தயார் செய்யப்படும் இப்பொழுதுள்ள முறைதவறான வழக்கமானது நின்றுவிடும். இவ்வௌஷத சாலையில் தயார் செய்யப்படும் ஔஷதங்களடங்கிய குப்பிகளின் மேல் அவற்றை உபயோகிக்க வேண்டிய வகைகளும், அவ்வௌஷதங்களின் அளவுகளும் குறிக்கப்படுவதால், ஆயுர்வேத வைத்தியர்கள் இவ்வௌஷதங்களை எங்கும் ஒரே சீராக உபயோகிப்பதற்கும் வழியேற்படும். இந்தியாவில் ஏதேனும் ஓர் இடத்தில் முதலில் இவ்வித ஔஷத சாலை ஒன்று ஏற்படுத்தினால், அதன் மூலமாக வரும் இலாபத்தைக் கொண்டு வெவ்வேறிடங்களில் வெவ்வேறு ஔஷத சாலைகள் காலக்கிரமத்தில் ஸ்தாபித்து விடலாம். இதற்காக நமது ஆயுர்வேத யூனானி வைத்தியர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து விசேஷமாக முயற்சி செய்ய வேண்டும். இவ்விதம் செய்யப் புகுந்தால் தான், ஒருநாளில்லாவிட்டால் மற்றொருநாளாவது இந்திய வைத்திய முறைகள் மேல்நாட்டு வைத்திய முறையைப்போல் அபிவிருத்தியாக வகையுண்டு. இவ்வித கம்பெனி ஒன்று ஏற்படுத்தினால், படித்துத் தேர்ந்த அனேக ஆயுர்வேத யூனானி வைத்தியர்களுக்கு அக்கம்பெனியிலும் உத்தியோகங்கள் கிடைக்கும். இது தான் மிகவும் இன்றியாத முயற்சி. ஆயுர்வேத வைத்தியர்களே! நீங்கள் இனியாவது விழித்துக் கொள்ளுங்கள். ஏதோ தோன்றியவாறு எழுதியதாக நினையாதீர்கள். நமது வைத்திய முறையும், வைத்தியர்களும், தேசமும் க்ஷேமப்படுவதற்கு அனுபவரீதியாய் பயன் தரக்கூடிய காரியம் இதுதான். கவனியுங்கள். பெரு முயற்சி செய்யுங்கள். க்ஷேமப்படுவீர்கள்!

SCHOOL OF TROPICAL MEDICINE.

உஷ்ணதேச வியாதிகளைப்பற்றிய ஆராய்ச்சி சாலை.

இப்பொழுது உஷ்ண தேசத்தில் இயற்கையாக உண்டாகக் கூடிய சில ரோகங்களைத் தடுப்பதற்கு அல்லது நிவ்ருத்திக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் படவேண்டுமென்று கவர்ன்மெண்டார் ஏற்கனவே யோசனைசெய்து வருகின்றனர். இதன் ஸம்பந்தமாக கல்கத்தாவில் ஒரு வைத்திய ஆராய்ச்சி சாலை ஸ்தாபிக்க சில நாட்களாய் பிரஸ்தாபம் நடந்து வந்தது. சென்ற மாதத்தில் வங்காள கவர்னர் லார்ட் கார்மைகேல் அவர்கள் கல்கத்தாவில் ஏற்படுத்தப்போகிற மேற்படி ஆராய்ச்சி சாலைக்கு அஸ்திவாரக்கல் நாட்டினர். உஷ்ண தேசத்தில் உண்டாகக் கூடிய வியாதிகளின் பிரத்தியக்ஷ...

ஆராய்ச்சியின் பொருட்டு செய்யப்படும் முயற்சிகளில் இதுவே முதற் பிரயத்னமாகும். இவ்வுஷ்ண தேசத்தின் நிலைமையை அநுஸரித்து உண்டாகும் வியாதிகள், இவ்வித உஷ்ணமுள்ள பிரதேசங்களிலேயே முக்கியமாய் உண்டாவதாகக் காணப்பட்டாலும், உஷ்ணமில்லாத வேறு தேசங்களில் வியாபிக்கக் கூடாதவையல்ல; அத்தேசங்களில் ஏதோ ஒருவிதமாய் தொற்றிக்கொள்ளுமானால் அங்கேயும் விருத்தியாகக் கூடும். இவை உஷ்ணக் குறைவான தேசங்களில் முதலில் உற்பத்தியாவது அரிதேயன்றி, உஷ்ண தேசத்திலிருந்து தொற்றிக்கொண்டு வந்தால் இதர தேசங்களில் அப்பால் தொடர்ந்து செழிக்கக் கூடியவைகளாகவே இருக்கும். வர்த்தகத்திற்கும், யாத்திரைக்கும் ஏற்பட்டுள்ள வஸதிகளால் பிரபஞ்சத்தில் எங்கும் போக்கு வரத்துகள் எளிதாய் விட்டமையால், உலகமெல்லாம் பல வகையில் ஒருவாறு ஒற்றுமையடைய நேரிட்டது; ஆகவே தேசாந்தரங்களும் த்வீபாந்தரங்களும் கூட இப்பொழுது ஒன்று போல் ஆய்விடத் தொடங்கின; இக்காரணத்தினால் வியாதிகளும் சுலபமாக ஒரு சீமையிலிருந்து மற்றொரு சீமைக்கும், ஒரு ஜாதியாரிடமிருந்து மற்றொரு ஜாதிக்கும் யாத்திரை செய்கின்றன. ஆகையினால் கல்கத்தாவில் முதன் முதல் ஏற்படுத்தப்படும் இவ்விதமான நூதன ஆராய்ச்சி சாலையினால், இந்தியாவுக்கு மாத்திரமே யல்ல, மற்று முள்ள இதர தேசங்களுக்கும் நன்மை யுண்டாகுமென்று எதிர் பார்க்கலாம்.

இந்த நவீன வைத்திய சாலையில் அவ்வியாதிகளின் ஆராய்ச்சிக்கு வேண்டிய ஸகலவித கருவிகளும் மற்ற ஸாதனங்களும் ஏற்படுத்தப்பட்டு, இவ்வியாதிகளின் காரணம், இவை உற்பத்தியாகும் வகைகள், பரவும் விதங்கள், அவற்றைத் தடுப்பதற் கேற்ற வழிகள், அவற்றின் சிகித்ஸா கிரமங்கள் என்னும் இவ் விஷயங்கள் சாஸ்த்ரீயமான விதிகளை அநுஸரித்து ஆராய்ச்சி செயயப்படும். பிறருடைய ஸஹாயமின்றியே தமது முயற்சியைக்கொண்டுப் பிரக்ருதி ஸம்பந்தமான இரஹஸ்யங்களை ஆராய்ச்சி செய்து அறிந்தவர்கள் அனேகர் ஏற்கனவே இப்பொழுதுண்டு. இச் சென்னையிலேயே ராஸ், டானெவன், க்னிமேஷா, க்ரிஸ்டோபால், பியாடன் முதலிய டாக்டர்கள் இவ் விஷயமாக எவ்வளவோ பரிச்ரமப்பட்டு, பிறது வரப்போகிற வைத்தியர்களுக்கு வழிகாட்டியிருக்கின்றனர். கல்கத்தாவில் ஏற்படுத்தப்படும் இவ்வாராய்ச்சிசாலையானது இப்பொழுது கீழ்நாடுகளில் செய்யப்படும் முதல் ஸ்த்தாபனமாகு மாதலால், இத் தேசத்தில் மேல் நாட்டு வைத்திய வித்வான்களின் சாஸ்த்ரீயமான உழைப்புக்கு ஒரு நல்ல நூதன தசை ஆரம்பமாயிற்றெனக் கூறலாம். இச் சாலையில் செய்யப்போகிற ஆராய்ச்சி வேலைகளால் உஷ்ண தேசமெங்கும் ஸாமானியமாய் விஷக்ரிமிகளின் மூலமாய் ஸம்பவிக்கிற வியாதிகளைக் (Parasitical diseases) கூடிய மட்டிலும் தடுக்கத் தகுந்த உபாயங்கள் ஏற்படும். மனித சரீரத்திற்கு ஹானியைத் தரக்கூடிய அனேக ஸூக்ஷ்மஜீவன்கள் உண்டல்லவா? இந்த ஸூக்ஷ்மஜீவன்களுக்கு வைரிகளாயிருந்து இவற்றை அழிக்கக் கூடிய வேறு சில ஜந்துக்களும் இருக்கின்றன. மனிதருக்கு அநுகூலமான ஸூக்ஷ்ம ஜீவன்களின் மூலமாய் நமக்குத் தீங்கு விளைவிக்கும் வேறு ஸூக்ஷ்ம ஜீவன்களை அழிக்க வகை தேடுவதே ஆராய்ச்சி செய்பவரின் முக்கிய கார்யமாகும்.

மேற்கூறிய சோதனை ஒரே விதமாயிராது; பற்பல வகையான சோதனைகள் செய்து விஷயங்களை நிர்த்தாரணம் செய்ய வேண்டி யிருக்கும். ரோகிகளின் சரீரத்திலுள்ள இரத்தத்தை சோதனை செய்யும் சாலை ஒன்று ஏற்

படுத்தப்படும்; வியாதிகளுக்குக் காரணமான ஸூக்ஷ்ம ஜீவன்களின் முட்டைகளைப் பரீக்ஷிப்பதற்காக ஒரு சாலை (Laboratory for Proto zoology) நிர்மிக்கப்படும்; ஸூக்ஷ்ம ஜீவன்கள் உற்பத்தியாய் விருத்தியாவதற்கேற்ற உஷ்ணமுள்ள தான ஒரு கிருஹமும், அக்கிருமிகளை அழித்து சுத்தம் செய்வதற்கு அனுகூலமான மற்றொரு கிருஹமும் (Laboratory for Sterilizing), விஷயங்களைக் கற்பிப்பதற்கான பாடசாலையும் கட்டப்படும். இந்த ஆராய்ச்சி சாலையினால் பூர்ணமான பலன் உண்டாக்க வேண்டுமென்று யோசித்திருப்பதால், திரவியம் மிகுதியாகவே செலவிட வேண்டி வரும். கவர்ன்மெண்டார் இதற்குத் தகுந்த உதவி செய்வார்களென்று நம்பப்படுகிறது. இப்பொழுது சந்தாவின் மூலமாய் மொத்தம் 1,17,952 ரூபாய் சேர்ந்திருப்பதாய் அறிகிறோம். இத்தொகையில் பைக்பர் இராஜகுமாரரான வீரேந்திர விக்ரமராஜா அவர்கள் ஒருவரே 50,000 ரூபாய் கொடுத்திருக்கின்றனராம். கல்கத்தா முனிஸிபாலிடி, வங்காள மாகாணத்திலுள்ள இதர முனிஸிபாலிடிகள், இரெயில்வே கம்பெனியார், வர்த்தகஸங்கங்கள், இதர ராஜகுமாரர்கள், மற்றும் பல தனிகர்கள் இவர்கள் மூலமாக ஸஹாயம் கிடைத்து வருவதாகவும் தெரிய வருகிறது. கல்கத்தாவில் முதன் முதலாக ஸ்தாபிக்கப்படும் இந்த ஆராய்ச்சி சாலையானது, தேசத்திற்கு அற்புதமான நன்மைகளைச் செய்யுமாறு உத்தமஸ்தாபனமாயிருக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஆயுர்வேத வைத்தியர்களும் ஆர்யவைத்திய சாஸ்திராபிவிருத்திக்காக இவ்விதமே காலக்கிரமத்தில் தன் மதிப்புடன் உழைக்க உபாயங்களைத் தெரிவிக்கவேண்டுமென்று நினைத்தே இவ்விஷயங்களை எழுதி வருகிறோம்.

THE MEDICAL REGISTRATION BILL WAS PASSED INTO LAW.

வைத்தியப்பதிவு மஸோதா சட்டமாய் நிறைவேறி விட்டது.

இந்த மாதம் 16, 17-ம் தேதிகளில் கூடிய சென்னை சட்ட ஸபையில் வைத்தியப்பதிவு மஸோதா விஷயம் மறுபடியும் விவாதத்திற்கு வந்தது.

ஹானரபுல் டாக்டர் நாயர் மஸோதாவில் ஏதோ வாய்மொழியினால் சில மாறுதல் செய்ய, கௌன்ஸில் அது பிறகு தீர்மானத்திற்கு விடப்பட்டது. அப்பொழுது ஹானரபுல் மிஸ்டர் V. S. ஸ்ரீநிவாஸ சாஸ்த்ரியார் இந்த மஸோதாவை ஆக்ஷேபித்துப் பேசினார். இந்த மஸோதா முதன் முதல் சட்ட ஸபையில் விசாரத்திற்கு வந்தபோது மெம்பர்களில் பெரும்பாலோர் இதை ஆக்ஷேபிக்கவில்லையானாலும், பிறகு க்ரமமாக இம்மஸோதாவினால் தீமைகளே விளையுமென்று அறிந்து, பொது ஜனங்களும் மெம்பர்களில் அனேகம் பேரும் இம்மஸோதா அனாவசியகமென்றே நினைக்கவேண்டி வந்தது. இந்த மஸோதாவினால் கஷ்டம் நேரிடுமென்று சுதந்திரமாக வைத்தியம் செய்பவர் நினைத்து முறையிட்டுக்கொண்டும் அவ்விஷயம் கவனிக்காமல் விடப்பட்டது. டாக்டர் நாயருக்கும் மற்ற மெம்பர்களுக்கும் நேர்ந்த அபிப்பிராய பேதங்களைக் கண்டு, ஹானரபுல் ஸர்ஜன் ஜெனரல் அவர்கள், மஸோதாவை ஒருவாறு சீர்திருத்தி விடுவதாக அங்கீகரித்தும், அவர் சொன்னபடி செய்யாமல் விட்டு விட்டார். நன்றாக வேண்டிய மட்டும் யோசனை செய்ததில், இந்த மஸோதாவினால் நன்மை உண்டாகாமற் போவது மாத்திரமேயல்ல, இதனால் நேர் விரோதமாக அனேகம் தீமைகளும் நேரிடுமென்று அறியப்படுவதால், இது சட்டமாய் நிறைவேறுவதைத் தாம் ஆக்ஷேபிப்பதாகவும் சொன்னார்.

பிறகு ஹானரபுல் மிஸ்டர் B. V. நரஸிம்மய்யர், பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்திற்குச் சிறிது இடங்கொடுத்து விஷயத்தை நிர்த்தாரணம் செய்ய வேண்டுமென்றும், பொதுவில் பார்க்கப்போனால் இவ்வித மஸோதா அவசியமென்று ஒருவரும் நினைக்காததுடன், மேல் நாட்டு வைத்தியர்கள் சிலர் அவ்விதம் அவசியமென்று சொன்ன போதிலும் பெரும்பான்மையோருடைய எண்ணத்தைப் புறக்கணித்து வெகு சொற்ப எண்ணிக்கையுள்ளவர்களின் சுயநலத்தைக் கருதி, தம்மைச்சுற்றிலுமுள்ள பொது

ஜனங்களுக்கும் அத்தொழிலிலிருப்பவருக்கும் ஸௌகரியக்குறைவை யுண்டுபண்ணுவது பிசகென்றும், ஆயுர்வேத-யூனானி வைத்தியர்களை பாதிக்காதபடி மஸோதா கொண்டுவரப்படுமென்று முதலில் சில உபயோகமில்லாத வாக்குறுதிகள் சொல்லியும் அவ்விதம் இறுதியில் செய்யவில்லை யென்றும் சொல்லி, டாக்டர் நாயர் இவ்வித விஷயங்களில் பொது நலப் பிரியத்தைப் பாராட்டாமற் போவதால் அவர் முனிஸிபாலிடியில் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படாமல் இறுதியில் ஏதோ கவர்ன்மெண்டின் உதவியினால் அவ்விதம் மீண்டும் கமிஷனராக வந்திருப்பது கவனிக்கத் தகுந்த தென்பது முதலியதைக்குறிப்பிட்டும், இம்மஸோதா பொதுவில் அவசியமாகத் தோற்ற வில்லையாதலால் இதற்கு நான் அனுகூலமான அபிப்பிராயம் வெளியிட முடியாது என்றும் சொன்னார்.

ஹானரபுல் மிஸ்டர் ஜைனுலாபுடீன் ஸாஹெப் பேசியதில், சென்ற நவம்பரில் சட்ட ஸபை கூடிய போது, இந்த மஸோதாவில் ஆயுர்வேத யூனானி வைத்திய முறைகளுக்கு விரோதமில்லாமலிருக்கும் வாக்கியங்களை மஸோதாவின் ஆரம்பத்திலாவது, மஸோதாவிலடங்கிய முழு விஷயத்திலுமாவது சேர்த்தாலன்றி இம்மஸோதா ஒப்புக்கொள்ளக்கூடிய தல்லவென்று ஆக்ஷேபித்ததற்கு, ஸெலெக்ட் கமிட்டியார் இவ்விஷயத்தை யோசித்து அவ்விதம் ஆயுர்வேத யூனானி முறைகள் இந்த மஸோதாவினால் பாதிக்கப்படாதபடி விளக்கமான சீர்திருத்தம் செய்யுமாறு தாம் ஏற்பாடு செய்வதாக ஹானரபுல் ஸர்ஜன் ஜெனரல் அவர்கள் மொழிந்தும், அவ்விதம் ஒரு சீர்திருத்தமும் விளக்கமாகச் செய்யப்படாமல், ஸெலெக்ட் கமிட்டியாரிடம் போவதற்கு முன் இம்மஸோதா இவ்விஷயத்தில் எப்படியிருந்ததோ அவ்விதமாகவே இப்பொழுதும் இருப்பதால், இது சட்டமாக நிறைவேறுவதை ஆக்ஷேபிப்பதாகச் சொன்னார்.

ஹானரபுல் ராவ்பஹதூர் V. K. இராமானுஜாசாரியர் அவர்கள், டாக்டர் நாயருடைய பிடிவாதத்தைப்பற்றி மிகவும் வற்புறுத்தி இம்மஸோதாவைத் தாக்கிப்பேசினார். மிஸ்டர் ஸ்ரீனிவாஸ சாஸ்த்ரியார் முதலில் இந்த மஸோதாவை ஆக்ஷேபிக்க இஷ்டப்படாமல், ஸர்ஜன் ஜெனரலுடைய அபிப்பிராயத்தை அனுஸரித்து சும்மாயிருந்தும், அப்பால் முடிவில் மஸோதா தகுந்தவாறு சீர்திருத்தப்படாததை நோக்கி, அனேக ஆயுர்வேத யூனானி வைத்தியர்களுக்குள்ள பயத்தைத் தணிக்குமாறு சில வார்த்தைகள் சேர்க்கும்படி கேட்டுக்கொண்டது பிரயோஜனப் படாததைக் கண்டும், அவரும் இப்பொழுது இம்மஸோதாவுக்கு விரோதமான அபிப்பிராயத்தையே வெளியிடவேண்டி வந்தது. டாக்டர் நாயர் ஆதிமுதல் பயமுறுத்துந் தன்மையை நடித்துக்காட்டி வருகிறார். உலகத்தில் லாயர்கள் பலவிதத்திலும் பொது விஷயங்களில் ஈடு கொடுத்து மிகச் சிறந்த அபிப்பிராயங்களை வெளியிடக்கூடியவரென்று ஜனங்களால் ஆதரிக்கப்பட்டிருக்க, அத்தொழிலிலிருப்பவரின் விரோதமான அப்பிரியத்திற்கு டாக்டர் நாயர் இம்மஸோதா மூலமாகப் பாத்திரமாவது சரியல்ல. ஆகவே டாக்டர் நாயரால் முரண்பட்டுக் கொண்டு வரப்பட்டிருக்கும் இம்மஸோதா சட்டமாக முடிவதை நாம் ஒப்புக்கொள்ள முடியாதென்றார்.

பிறகு ஹானரபுல் மிஸ்டர் ராமசந்திரராவ் அவர்கள் பேசியதாவது:—இந்த மஸோதா ஆயுர்வேத-யூனானி வைத்தியர்களைப் பாதிக்காதென்று முதலில் சொல்லியிருப்பது உண்மையானாலும், பிறகு வெளிப்படையாக அவ்விஷயத்தை அறிவிக்கும்படியான சில வார்த்தைகள் சேர்க்கப்படுமென்று சொன்னவிதம் செய்யாமற்போனது சரியல்லவென்றும், டாக்டர் நாயர் தாம் ஒரு மஸோதாவுக்குப் பொறுப்பாளியாயிருக்கும் வரையில், அவ்விஷயமாக மற்றவருடைய கொள்கைகளைக் கவனிக்காமல் தாமே தம்மனதில் இதை இவ்விதம் செய்து முடிக்கவேண்டுமென்று தீர்மானித்துக் கொள்வது தகாதென்றும், ஆகவே சில ஹானரபுல் மெம்பர்களின் கொள்கைகளை அனுஸரித்து இந்த மஸோதாவில் சில சீர்திருத்தங்கள் அமைக்கப்பட வேண்டியிருக்கின்றனவென்றும் கூறினார்.

அப்பால் ஹானரபுல் மிஸ்டர் A. S. கிருஷ்ணராவ் அவர்கள் மஸோதாவை பல காரணங்களைக்கொண்டு ஆக்ஷேபித்துப் பேசினார். அவசியமாகச் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் அனேகமிருக்க, ஒன்றும் கவனிக்கப்படவில்லை. இந்த மஸோதாவைப் பிரேரித்தது முதலாகவே இந்த மஸோதா அனேக குழப்பங்களுக்கும் தீங்குகளுக்கும் காரணமாகுமென்றும், சுதேச வைத்திய முறை அபிவிருத்தியாவதற்கு இம்மஸோதா தடங்கலாக இருக்குமென்றும் நினைத்தவர்களுள் தாமும் ஒருவர் என்றார். சென்ற ஏப்ரல் மாதத்தில் இந்த மஸோதா பிரேரிக்கப்படுகையில், அட்வொகேட் ஜெனரல் அவர்கள், இதர வைத்திய முறைகளின் அபிவிருத்திக்குத் தடங்கல் உண்டு பண்ணக்கூடிய அனேக அம்சங்கள் மஸோதாவில் அடங்கியிருப்பதால், தாராள புத்தியை உபயோகப் படுத்தி அவ்வித அம்சங்களை ஏன் விலக்கக்கூடாதென்று சொ

ன்னார். லண்டனிலுள்ள மெடிகல் கௌன்ஸிலால்
ங்கீகரிக்கப்பட்ட முறைப்படி வைத்தியத் தொழில்
டத்துபவருக்கே இந்த மஸோதா அவசியமானதென்
றும், இதர முறைகளின்படி வைத்தியம் செய்பவரை
து பாதிக்காதென்றும், அவ்விதமே சில சீர்திருத்
ங்கள் செய்வதாகவும் ஸர்ஜன் ஜெனரல் அவர்கள்
றியிருந்தும், ஸெலெக்ட் கமிட்டிக்குப் போவதற்கு
ன் எந்த ஆக்ஷேபங்கள் அடங்கியிருந்தனவோ, அதே
க்ஷேபகரமான விஷயங்கள்தான் இப்பொழுதும்
ருக்கின்றன. சுதந்திரமாக வைத்தியம் செய்பவ
க்கு வேண்டிய ஸௌகரியங்களைக் கொடுக்கா
ல், அவர்களை நிர்ப்பந்தங்களுக்கு உட்படுத்துவது
சகு. தேசத்தில் வேண்டியவளவு ஆஸ்பத்திரி
ள் கிடையாது. ஆகையால் சுதந்திரமாக வைத்
யம் செய்யும் தொழிலாளிகளுக்கு ஸௌகரியங்களை
ண்டு பண்ணி அவர்கள் எங்கும் வியாபிக்கும்படி
செய்யவேண்டும். அதை விட்டு இவ்விதம் முரண்
ட்டு மஸோதா கொண்டு வருவது தேச க்ஷேமத்
ற்கு உற்றதல்ல. யூனிவர்ஸிடி செய்ய வேண்டிய
ரியத்தின்மேல் மெடிகல் கௌன்ஸிலுக்கு விசேஷ
திகாரம் ஏற்படுவதும், ஸிவில் கோர்ட்டு செய்ய
வண்டிய காரியத்தை இக்கௌன்ஸில் ஆக்ரமித்து
வைத்தியர்களுக்கு ஆக வேண்டிய நியாயமான தீர்ப்பு
ளில் அனாவசியமாகப் பிரவேசிப்பதும் பெரும் பிசகு.
யுர்வேத யூனானி வைத்தியர்களுக்கும் இந்த மஸோ
ா இடஞ்சலை யுண்டுபண்ணுவதாயிருக்கிறது. ஆகை
ால் இது சட்டமாகக் கூடாதென்று தாம் அபிப்
ராயப்படுவதாகச் சொன்னார்.

ஹானரபுல் மிஸ்டர் B. N. சர்மா எடுத்துக்கூறிய
தாவது:—தாம் நன்றாக யோசனை செய்து பார்த்ததில்
டாக்டர் நாயர் மெடிகல் கௌன்ஸிலின் தீர்மான
விஷயங்களில் லாயர்களுக்கு இடங்கொடுக்காம[illegible]
னது முற்றிலும் சரியல்லவென்றும், நியாய[illegible] அவ்
விஷயங்களில் லாயர்கள் பாத்தியப்பட்டவர்க[illegible]
றும், அவ்விதம் லாயர்களின் அபிப்பிராயத்திற்கு
மாறாக டாக்டர் நாயர் நடந்து கொள்ளும் வரையில்
வக்கீல்களை அவருடைய மஸோதாவுக்கு அனுகூல
மான அபிப்பிராயத்தை வெளியிடச் சொல்ல அவ
சியமில்லை யென்றும், பொதுவில் தேசத்தின் நன்
மைக்கு இவ்வித சட்டம் அவசியமாகத் தோற்றவில்லை
யென்றும், 1854-ம் வருஷத்திய மெடிகல் ஆக்ட்
பிரகாரம் வைத்திய விஷயத்தில் வித்தியாஸங்
களை யுண்டு பண்ணி ஒரு சட்டம் ஏற்படுத்துவது
ஸாத்தியமில்லை யென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிற
தென்றும், இந்த மஸோதா சட்டமாக நிறைவே
னால் வரி செலுத்துவோருக்குத் தலைச்சுமை இன்னும்
அதிகமாகுமென்றும், ஆகையினால் இது சட்டமாக
நிறைவேறுவதைத் தாம் ஆக்ஷேபிப்பதாகவும் கூறினார்.

பிறகு ஹானரபுல் மிஸ்டர் கேசவப்பிள்ளை அவர்
கள் சொன்னதாவது:--டாக்டர் நாயர் ஏற்கனவே
வெகு வியாபகராக வைத்தியத்தொழில் செய்பவ
ரென்று பெருமைபெற்றிருக்கிறார்; இப்பொழுது இந்த
வைத்தியப் பதிவு மஸோதா ஸம்பந்தமாய் இவர் வெகு
பெரியசட்டநிர்மாணம் செய்பவரென்ற ஆவேசமுண்
டாக்கத் தக்க மற்றொரு புகழையும் ஸம்பாதித்திருக்
கிறார். இவர் ஒரு சாதுர்யமுள்ள லாயரைப்போலவே
இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டின் ஸஹாயத்தையும்
அடைந்திருக்கிறார். ஸர் ஜான் அட்கின்ஸன் இந்த
மஸோதாவுக்குக் கவர்ன்மெண்டாருடைய அருளை
வேண்டிய மட்டிலும் அளித்திருக்கிறார். மஸோதா
அவசியமென்பதற்கு வேண்டிய ஆதாரம் பரமரஹஸ்
யமாக மூடப்பட்டிருக்கிறது. ஆகையினால் இம்ம
ஸோதா சட்டமாவதை ஆக்ஷேபிக்கிறேன் என்றார்.

பிறகு ஹானரபுல் மிஸ்டர் P. S. சிவஸ்வாமி
ஐயர் மஸோதாவுக்கு அனுகூலமாகப் பேசினாரென்று
நாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆயுர்வேத
யூனானி வைத்திய முறைகளுக்கு இந்த மஸோதா
எவ்வித தீங்கையும் உண்டுபண்ணுவதாயில்லையென்
றும், ஆயுர்வேத யூனானி வைத்திய முறைப்படி பிராக்
டிஸ் செய்பவருக்கு இந்த மஸோதாவால் யாதொரு
கௌரவக்குறைவும் நேரிடமாட்டாதென்றும் சொ
ன்னார். ஹானரபுல் மிஸ்டர் B. N. சர்மா பேசி
யதில் வைத்தியத்தொழில் செய்பவரின் ஸௌகரி
யத்திற்குக் குறைவை யுண்டு பண்ணும் விஷயங்கள்
மஸோதாவில் எந்த பாகத்தில் குறிக்கப்படுகின்றன
வென்பதைத் தெரியப்படுத்தவில்லை. கவர்ன்மெண்டு
உத்தியோகம் வகிக்கும் வைத்தியர்களுக்கும், சுதந்
திரமாய் பிராக்டிஸ் செய்யும் வைத்தியர்களுக்கும்
பிரத்தியேகமாக பேதங்களை யுண்டு பண்ணி வெவ்
வேறு ஸ்தானங்களை யேற்படுத்தவேண்டிய அவசிய
மில்லை. வைத்தியத்தொழில் ஸம்பந்தமான நன்ன
டத்தை அல்லது துர்நடத்தையை இங்கிலீஷ் கோர்
டுகள் தீர்மானிப்பதில்லை. காலேஜுகளுக்கும் யூனி
வர்ஸிடிக்கு முள்ள ஸ்வாதந்த்ரியத்தைக் கவர்வதற்கு
மெடிகல் கௌன்ஸில் தலையிட்டுக்கொண்டு அவற்
றின் காரியங்களுக்கு இடையூறு செய்யுமென்று சிலர்
நினைப்பது ஆதாரமற்ற விஷயம் என்றும் சொல்லி
முடித்தார்.

அப்பால் ஹானரபுல் ஸர்ஜன் ஜெனரல் பனர்மென் மஸோதாவினுடைய 13-வது வகுப்பில் கண்ட சில விஷயங்களுக்கு உண்டான சில ஸாமானிய ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லி விட்டு, மஸோதாவை ஆதரித்துப் பேசினர்.

ஹானரபுல் மிஸ்டர் K. சிதம்பரநாத முதலியார் ஸர்டிபிகேட் விஷயத்தைப்பற்றி சிறிது ஆக்ஷேபம் சொல்லி விட்டு மஸோதா நிறைவேறுவதைத் தாம் அங்கீகரிக்க முடியாதென்று சொன்னர்.

பிறகு, ஹானரபுல் டாக்டர் நாயர் மற்ற மெம்பர்கள் சொல்வதை யெல்லாம் கவனித்துக் கேட்டிருந்து அவற்றிற்கெல்லாம் ஒருவாறு பதில் சொல்லி முடித்தார். அதாவது டாக்டர் நாயர், தாம் கொண்டு வந்த மஸோதா விஷயமாக வந்த ஆக்ஷேபங்களில் சட்ட ஸம்பந்தமானவற்றிற்கு ஹானரபுல் மிஸ்டர் சிவஸ்வாமி ஐயரும், வேறு சில விஷயங்களுக்கு ஸர்ஜன் ஜெனராலும் ஏற்கனவே ஸமாதானங்கள் சொல்லிவிட்டதால், சில மெம்பர்கள் தம்மீது பழி கூறிய ஒரு விஷயத்திற்கு மாத்திரம் ஸமாதானம் சொல்ல வேண்டியிருக்கிறதென்றும், ப்ரிட்டிஷ் மெடிகல் கௌன்ஸிலையும், பம்பாய் மெடிகல் ஆக்டையும் தாம் அனுஸரித்து இம்மஸோதா கொண்டுவந்திருப்பதைக் கருதி சிலர் சொல்லும் பழியைத் தாம் ஏற்பதாகவும், அவ்விதம் கொண்டுவந்திருப்பதால் பாதகம் ஒன்றுமில்லை யென்றும், இந்த மஸோதாவுக்கு ஸம்பந்தமில்லாத சில விஷயங்களைப்பற்றிய பழியைத் தாம் லக்ஷியம் செய்யவில்லை யென்றும் சொல்லி முடித்தார்.

இறுதியில் மஸோதாவை ஆக்ஷேபித்து 11-மெம்பர்கள் ஓட்டுக்கொடுக்க 23 மெம்பர் அனுகூலமாக ஓட்டு, கொடுத்ததால் வைத்தியப் பதிவு மஸோதாவானது சட்டமாக நிறைவேறி விட்டது.

CORRESPONDENCE.

கடிதங்கள்.

THE VAIDYA SANGHAM OF KUMBAKONAM.

கும்பகோணத்தில் வைத்திய ஸங்கம்.

இதற்கு முன்னமே கும்பகோணத்தில் ‘இந்திய ப்ராசீன வைத்திய ஸமாஜம்’ என்று ஒரு வைத்திய ஸங்கம் ஏற்படுத்தப்பட்டதாய் இப்பத்திரிகையின் மூலமாய் பலர் அறிவர். மேற்படி ஸமாஜத்தின் ஆதரணையின்கீழ் கும்பகோணத்தில் இந்த மாதம் 8-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலையில் போர்டர் டவுன் ஹாலில் கும்பகோணத்திலுள்ள மஹாஜனங்களும், வெளியூர்களிலுள்ள சிலரும், ஆயுர்வேதயூனனி வைத்தியர்களும் சேர்ந்து ஒரு பப்ளிக் மீடிங் நடத்தினர். ஹானரபுல் ராவ்பகதூர் V. K. இராமானுஜாசாரியர் அவர்கள் அக்கிராஸனம் வஹித்தார்கள். ஆயுர்வேத யூனனி வைத்தியமுறைகளை அபிவிருத்தி செய்வதில் ஆதரவுள்ள அனேக கனவான்கள் வந்து கூடியிருந்தார்கள்.

ஹானரபுல் மிஸ்டர் V. K. இராமானுஜாசாரியார் அவர்கள் முதலில் செய்த பிரஸங்கத்தின் ஸாராம்சமாவது:—“இந்தியர்களுடைய வைத்தியமுறைகளால் சிறந்த குணங்கள் உண்டாவதையும், இம்முறையை அனுஸரித்து வைத்தியம் செய்து கொள்வதால் அதிக செலவு நேரிடுவதில்லையென்பதையும் அறிவேன். இப்பொழுது இவ்வைத்திய முறைகள் மிகவும் தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டன. இந்திய வைத்தியமே நமது தேஹத்திற்கு ஏற்றதாயிருப்பதுடன், மேல் நாட்டு வைத்தியமுறையைப் போல் தற்கால சாந்தியாக இல்லாமல் வியாதிகளை வேரறுக்க வல்லதாகவும் இருக்கின்றது. இந்திய வைத்திய சாஸ்திரத்தை முறைப்படி மாணுக்கருக்குக் கற்பித்து இவ்வைத்திய சாஸ்திரத்தை மறுபடியும் உஜ்ஜீவிக்கச் செய்வதற்கு ஒவ்வொரு இந்தியனும் முன் வரவேண்டும். டாக்டர் நாயர் இவ்வைத்தியத்திற்குப் பிரதிகூலமாக ஒரு மஸோதா கொண்டு வந்திருந்தபோதிலும், தூங்கிக்கொண்டிருந்த இந்திய வைத்தியர்கள் விழித்துக்கொள்வதற்கு அது ஒரு காரணமாய் ஏற்பட்டது. பிறகு ராவ்பஹதூர் N. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B. A; B. L; அவர்கள் முதல் தீர்மானத்தைப் பிரேரிப்பார்” என்று சொல்லி முடித்தார்.

முதல் தீர்மானத்தைப் பிரேரிக்கும் போது ராவ்பஹதூர் N. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் சொன்னாவது:—ஆயுர்வேதயூனனி வைத்தியர்களுக்காக இவ்வூரில் ஒரு ஸங்கம் ஏற்படுத்த வேண்டியது இன்றியமையாத விஷயமென்றும், இந்திய வைத்தியசாஸ்திரத்தை வைத்தியர்களுடைய பிள்ளைகளுக்குக் கற்பிப்பதற்கு ஒரு பாடசாலையும், வைத்தியக் கிரந்தங்களடங்கிய ஒரு புஸ்தகசாலையும் அவசியமானதென்றும் இந்த மீடிங்குக்கு வந்திருக்கிறவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இப்பொழுது இந்திய வைத்தியர்களின் உதவி மிகவும் வேண்டியிருக்கின்றது. இங்கு முனிஸிபல் ஆஸ்பத்ரிகளில் தினந்தோறும் சுமார் 400 பேர் வைத்தியத்திற்குப் போகிறார்கள்; இந்திய வைத்தியர்களிடம் சிகித்ஸைக்காகப் போகும் ஜனங்

கள் அதைவிட மூன்று பங்கு அதிகமாகவே இருப்பதாய் அறிகிறேன். மேல் நாட்டு வைத்திய முறையை அபிவிருத்தி செய்ய அனேகம் பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வந்தாலும் அது இன்னும் அங்குராவஸ்தையிலேயே இருக்கின்றது. நமது வைத்தியமுறை அபிவிருத்தியடைந்து வெகு நாட்களுக்கு முன்னமே வேண்டியவளவு வெகுநுட்பமான சீர்திருத்தங்களைப் பெற்றிருக்கிறது. முனிஸிபல் ஆஸ்பத்திரிகளில் இலவசமாக சிகித்ஸை செய்த போதிலும், அங்குள்ள ஆங்கில வைத்தியர்கள் சொல்லும் பத்தியக்கிரமங்களை நோக்கினால் செலவு அபரிமிதமாய் நேரிடுகின்றது. ஆகவே ஏழை ஜனங்களுக்கு அவர்கள் சொல்லும் பத்தியமுறைகளை அனுஸரிக்க முடியாமற்போவதுடன், அவர்கள் சொல்லுகிற உணவு வகைகள் நம்மவருடைய பிரக்ருதிக்கு ஏற்றவைகளாகவும் இருப்பதில்லை. பண்டைக்காலங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் அந்தந்த கிராமத்திற்கென்று இரண்டொரு வைத்தியர்கள் ஏற்பட்டு, அவ்வூரில் உண்டாகும் விளை பொருள்களில் சிறிது பாகம் பெறுவதற்கு மிராசுபாத்தியதை யுடையவராகவும் இருந்தனர். இப்பொழுது அவர்களைப் போஷிப்பதற்கேற்ற அவ்வித ஏற்பாடுகள் ஒன்றும் கிடையாது. 'தீமையிலிருந்து நன்மை ஸம்பவிக்கும்' என்று சொல்வது நிஜமே; டாக்டர் நாயருடைய மஸோதாவானது நம்மை இனியாவது தேசத்திற்கு வேண்டிய நன்மையை செய்யத் தூண்டுவதற்குக் காரணமாயேற்பட்டதால், அவ்விஷயத்தில் நாம் ஒருவாறு நன்றி பாராட்ட வேண்டியதே. ஆகையினால் இத்தீர்மானம் மிகவும் அவசியமானதென்று நான் நிச்சயிக்கிறேன்." பிறகு இவ்விஷயம் தஞ்சாவூர் ஞானசிகாமணி என்பவரால் ஆமோதிக்கப்பட்டு, கூட்டத்தில் ஒ[illegible] வராலும் அங்கீகரிக்கப்பட்ட[illegible]

2. இரண்டாவது தீர்மான[illegible] ப்ரொபஸர் ஸுந்தரராம ஐயர் M.A. அவர்களால் ப்ரேரிக்கப்பட்டது. அப்பொழுது அவர் செய்த உபந்யாஸத்தின் கருத்தாவது:—"பலர் நமது வைத்தியசாஸ்திரம் அழிந்து விடவேண்டிய நிலைமையிலிருப்பதாகக் கருதிய போதிலும், இந்தியருடைய இதர சாஸ்திரங்களைப்போல வைத்தியசாஸ்திரமும் உலகத்தில் சாச்வதமாக நிலைத்திருக்கக் கூடியதென்பதுதான் நிச்சயம். இவ்வைத்திய சாஸ்திரமானது ம்ருதபாஷை (Dead Language) என்று அநியாயமாய் எண்ணப்படும் ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருப்பதால், அப்பாஷையிலடங்கிய விஷயமும் மரிக்கவேண்டியதேயென்று சொல்வது பிழை. இந்தியாவிலுள்ள சாஸ்திரங்களுக்கு ஒருவித பயமும் நேரிட்டுவிடவில்லை. அவை அழியக்கூடியவையாகவுமில்லை. அவை அழிந்து விடவேண்டுமென்று மனப்பூர்வமாய் எண்ணுகிற மனிதனுமில்லை. வேண்டியவளவு திரவியம் சேர்ந்தவுடனே கும்பகோணம் முனிஸிபல் எல்லைக்குள் ஸமாஜத்திற்கு அவசியமான ஓர் இடமும், வைத்தியபாடசாலை, புஸ்தகசாலை, ஔஷதிகளைப் பயிரிடுவதற்கேற்ற ஒரு தோட்டம், ஒரு வைத்தியசாலை இவற்றிற்கு வேண்டியதான இடமும் தெரிந்தெடுப்பதற்குப் பிரயத்னம் செய்யவேண்டியது அவசியம்." ஸ்ரீமான் வைத்தியரத்னம் பண்டிட் D. கோபாலாசார்லு அவர்கள் இத்தீர்மானத்தை ஆமோதித்து அடியில் வருமாறு பேசினார்:—"எனக்குத் தெரிந்த மட்டிலும் ஆயுர்வேத சாஸ்திரமானது இதர தேசங்களில் ஏற்பட்டுள்ள வைத்தியசாஸ்திரங்களைவிட எவ்விதத்திலும் மேன்மை பொருந்தியதென்பது நிச்சயம். இவ்வைத்திய முறையே தேசாந்தரங்களில் பற்பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு அந்தந்த தேசத்தில் வைத்தியமுறைகள் ஏற்படுவதற்கு ஆதாரமாயிருந்த தென்பதற்கு, வெகு பிராசீனமென்று சரித்திரக்காரர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற அதர்வண வேதத்தில் இவ்வைத்திய சாஸ்திரத்திலடங்கிய விஷயங்கள் எல்லாம் குடி கொண்டிருப்பதே போதுமான மூகாந்தரமாகும். அறுபதுவருஷகாலமாக M.D என்கிற வைத்தியப்பட்டத்தைப் பெற்றவர் 11-பெயர் தான்; இவர்களிலும் ஒருவர் பரீக்ஷையின்றியே கௌரவமாக M.D. என்கிற பட்டத்தைப் பெற்றிருக்கிறார். தேசத்திலுள்ள ஜனஸங்கியைக்கு ஏற்றவாறு அவ்வளவு இங்கிலீஷ் வைத்தியர்களை உண்டாக்குவதற்கு அனேக நூற்றாண்டுகள் செல்லும். இந்த ராஜதானியில் 42,000 ஜனங்களுக்கு ஒரு படித்த வைத்தியன் வீதம் ஏற்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு சொற்ப ஸங்கியையுள்ள ஆங்கில வைத்தியர்களால் ஜனங்களுக்கு வைத்தியவிஷயத்தில் போதுமான ஸௌகரியம் ஏற்படுமென்று நினைப்பதற்கில்லை. ஆகவே இந்திய வைத்தியங்களை அபிவிருத்தி செய்து இந்த முறைப்படி ஜனங்களுக்குக் கூடுமான உதவி செய்யவேண்டியது அவசியம்" என்று சொன்னதும், இத்தீர்மானம் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

3. பிறகு ராவ்பஹதூர் S. அப்புசாஸ்த்ரியார் B.A; அவர்களால் மூன்றாவது தீர்மானம் ப்ரேரிக்கப்பட்டது; அப்பொழுது அவர் செய்த பிரஸங்கத்தின் ஸாராம்சமாவது:—"நமது தேசத்தின் நிலைமை

க்கு ஏற்றது இந்தியவைத்திய முறையே. அனேக ரோகங்கள் ஆங்கிலவைத்தியத்தினால் குணப்படாமல் இந்தியவைத்திய முறையினாலேயே குணமானதை நான் பலமுறையும் கண்டிருக்கிறேன். ஆகவேஇந்திய வைத்தியமுறையை அபிவிருத்திக்குக் கொண்டுவர வேண்டியது மிகவும் முக்கியமான காரியம். இவ்வைத்தியாபிவிருத்திக்காக வைத்தியபாடசாலையும், வைத்தியசாலையும், புஸ்தகசாலை முதலியதும் ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. நான் ஏற்கனவே முப்பது வருஷகாலமாக ஒரு பெரிய ஹைஸ்கூலை ஏகதேசத்தில் நிர்வஹித்து வருவதால், வைத்தியபாடசாலை முதலியதை நிர்வஹிப்பதற்கு எவ்வளவு திரவியஸஹாயம் வேண்டுமென்பதை ஒருவாறு அறிந்து, அதில் கஷ்ட ஸாதகங்களையும் தெரிந்து கொண்டிருக்கிறேன். இப்பொழுது இதற்காகக் குறைந்தது 30,000 ரூபாய் வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதுவும் இவ்விஷயத்திற்கு வெகு சிறியதொகையே. அத்தொகை சீக்கிரத்தில் சேகரிக்கப்பட வேண்டுமென்றும், அதற்காகத் தகுந்த முயற்சி செய்யவேண்டுமென்றும் கோருகிறேன்." பிறகு இவ்விஷயத்தைப் பற்றி வைத்திய கலாநிதி பத்திராதிபரான பண்டித M. துரைஸ்வாமி ஐயங்கார் பேசியதின் கருத்து அடியில் வருமாறு:—"மேல் நாட்டு முறைப்படி வைத்தியம் செய்பவரில் சிலர், ஆயுர்வேத வைத்தியமென்பது ஒரு ஒழுங்கான முறையாகத் தோற்றவில்லை யென்று சொல்வதை நான் பலமுறையும் கேட்டிருக்கிறேன்; ஆனால் ஆயுர்வேதநூல்கள் இவைகளென்றும், அவற்றில விவரிக்கப்பட்டுள்ள விஷயங்கள்இன்னவை யென்றும் உணராதவர்களே அவ்வாறு கூறுவதால், அவ்விதம் சொல்வதைப்பற்றி நாம் சிந்திக்கவேண்டிய அவசியமில்லை. ஆயுர்வேதமானது வைத்திய சாஸ்திரத்திற்கு வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கியதாயிருக்கின்றது. வாத பித்த கபங்கள் என்கிற விஷயங்களைப்பற்றி சில ஆங்கில வைத்தியர்கள் அவ்விஷயத்தை அறியாமையினால் பரிஹாஸமாகப் பேசுகின்றனர். வாத பித்த கபங்கள் என்கிற மூன்று விபாகங்களைக் கண்டுபிடித்தவர் மஹாமேதாவிகள். இவ்விஷயங்கள் ஆதரிப்பாரின்றி காலக்கிரமத்தில் அழியத்தலைப்பட்டதால், இப்பொழுது இவ்விதம் ஆங்கில வைத்தியர்கள் ஏளனம் செய்யும்படி நேரிட்டது. இப்பொழுதும் பாதகமில்லை. இனியாவது இதை ஆதரிப்பதற்கு நாம் கண்விழித்துப் பார்த்து விஷயங்களை உணர்ந்து ஊக்கத்துடன் உழைக்க வேண்டும். இப்பொழுது 30,000 ரூபாய் சேர்ந்து விட்டால் வைத்திய பாடசாலை, வைத்தியசாலை, புஸ்தகசாலை, தோட்டம் இவ்வளவும் ஏற்படுத்தி விடலாமென்று கருதப்படுகிறது. ஆனால், நான் ஒரு பெரிய ஆயுர்வேத ஆஸ்பத்திரியில் காரியம் செய்து வருவதால், ஒரு வைத்திய சாலையை நிர்வஹிப்பதற்கு மாத்திரம் எவ்வளவு மூலதனம் வேண்டுமென்று அனுபவத்தைக்கொண்டு அறிவேன். இந்த 30,000 ரூபாய் ஒரு வைத்திய சாலையை நிர்வஹிப்பதற்கு தான் ஒருவாறு போதுமென்று சொல்லலாம். பாடசாலை ஸ்தாபிக்கவேண்டுமானால் 30,000 அல்ல, 3 லக்ஷம் ரூபாய் மூலதனம் இருந்தால்தான் வேலையைத் திருப்தி கரமாக நடத்தலாம். இல்லாவிடில் இராஜாங்கத்தார் அங்கீகரிக்கும்படி நாம் காரியம் செய்ய முடியாது. ஆகிலும் முதலில் இந்த 30,000 ரூபாய் வசூலானால் பிறகு பார்த்துக் கொள்வோம். இந்த கும்பகோணத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு ரூபாய் கொடுத்த போதிலும் ஒரே தினத்தில் இவ்வளவு தொகையும் சேர்ந்து விடுமென்பதில் ஸந்தேஹமில்லை. மோடார் வண்டி வாங்குவதற்கு இரண்டொருவர் செலவழிக்கும் தொகையை இவ்விஷயத்தில் செலவு செய்தால் இந்த விஷயத்தில் அவ்வளவு பணமும் சேர்ந்து விடாதா? நமது மூத்தோர் இயற்றிய அருமையான சாஸ்திரத்தை விருத்தி செய்வது நமது கடமை. நமது வைத்திய முறையை அனுஸரித்து வைத்தியம் செய்து கொள்வதில் நமக்குச் செலவும் குறைவு; இத்தேசத்திய ஜனங்களின் பிரக்ருதிக்கு இவ்வைத்தியமே ஏற்றதாகவும் இருக்கிறது. ஆகையினால் இவ்விஷயத்தில் ஒவ்வொருவரும் திரவிய ஸஹாயம் செய்வது மிக முக்கியமான காரியம்; வைத்தியர்கள் மாத்திரம் ஸஹாயம் செய்வது போதாது; பொது ஜனங்களும் அவ[illegible] ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்க[illegible]ர்களுடைய தாய் தேசத்திய சாஸ்திரத்தை [illegible]ரணம் செய்வதற்காக இயன்றவளவு அவசியம் [illegible]வி செய்ய வேண்டும்." பிறகு ஸபையிலிருந்தவர்[illegible]ளால் இவ்விஷயம் ஒரே மனதாய் அங்கீகரிக்கப் பட்ட[illegible].

4. மிஸ்டர் T. K. சிவராமய்யர், B. A; B. L; அவர்களால் நான்காவது விஷயம் பிரேரேபணை செய்யப்பட்டது. அதாவது, "இந்திய ப்ராசீன வைத்திய ஸமாஜத்தின் மூலமாய் ரூபாய் 10,000 சேர்ந்தவுடனே 'ஸொஸைடி ஆக்டின்' பிரகாரம் இந்த ஸங்கமானது ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டுமென்று இந்த மீடிங்கின் அபிப்பிராயம்." இந்தத் தீர்

மாணம் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் M. V. இராமானுஜாசாரியாரால் ஆமோதிக்கப்பட, ஸபையிலுள்ளவர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

5. பிறகு மிஸ்டர் C. S. வெங்கடராம சாஸ்திரியார், ஹைகோர்ட்டு வக்கீல் அவர்களால் ஐந்தாவது பிரேரணை கொண்டு வரப்பட்டது; இந்த ஸங்கத்தின் ஸெக்ரிடரிகளான ம-ா-ா-ஸ்ரீ ஸீதாராம வைத்தியரும் ம-ா-ா-ஸ்ரீ. K. S. துரைஸ்வாமி பண்டிதரும் கும்பகோணத்தில் வீடு வீடாகச் சென்று மேற்படி ஸபைக்காக வைத்தியர்களிடமிருந்தும் மற்றும்பொது ஜனங்களிடமிருந்தும் பணம் வசூல் செய்யக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்களென்றும் தீர்மானிக்கப்படுகிறது. இப்பிரேரணையை ம-ா-ா-ஸ்ரீ T. A. பாலகிருஷ்ண உடையார் அவர்கள் தாங்கிப்பேச ஒருமிக்க ஸபையோரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஹானரபுல் ராவ்பஹதூர் V. K. இராமானுஜாசாரியர் B, A; ஹானரபுல் மிஸ்டர் K. சிதம்பரநாத முதலியார், ராவ்பஹதூர் N. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B. A; B. L; மிஸ்டர் A. C. நாராயணஸ்வாமி ஐயர், மிஸ்டர் S. சிவகுருநாத செட்டியார், B. A; B. L; மிஸ்டர் T. A. பாலகிருஷ்ண உடையார், மிஸ்டர் N. லால்கான் ஸஹிப்பஹதூர் இவர்கள் கமிட்டி மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

முடிவில் ஸபாத்தியக்ஷரான மிஸ்டர் இராமானுஜாசாரியர் "இவ்விஷயத்தில் அனைவரும் தம்மால் இயன்றவளவு ஸஹாயம் செய்து நமது வைத்திய சாஸ்திரத்தை ஒழுங்காகக் கற்பித்து ஜனங்களுக்கு வெளிப்படையாக நன்மை செய்து காட்டினால், பிறகு கவர்ன்மெண்டாரை ஸஹாயம் செய்யக் கேட்டுக்கொள்ளவும், அவர்களும் அதற்கு ஒருவாறு இணங்கிஸஹாயம் செய்ய முன் வரவும் வகையேற்படுமாகையால், மீடிங்கில் விஷயங்களைப் பேசியும் கேட்டும் விட்டு அப்பால் இக்காரியத்தில் எவரும் அக்கரைபாராட்டாமலிருந்து விடமாட்டார் என்று நம்புகிறேன்.' என மொழிந்து ஸபையைக் கலைத்தார்.

இந்த மீடிங்குக்கு அநேக வைத்தியர்களும், யூனானி ஹகீம்களும், மற்றும் அநேக பொது ஜனங்களும் உள்ளூரிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் வந்திருந்ததால், மீடிங்கு வெகு கம்பீரமாகவும் ஒழுங்காகவும் நடைபெற்றது. இவ்விதமே ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு ஆயுர்வேத வைத்திய சாலையை ஏற்படுத்துவதற்கு ஆங்காங்குள்ள பொது ஜனங்களும், முக்கியமாய் சுதேச வைத்தியர்களும் தகுந்த முயற்சி எடுத்துக்கொண்டால் வெகு சீக்கிரத்தில் இந்திய வைத்திய முறை அபிவிருத்தியடையுமென்பதில் ஐயமில்லை.

A Correspondent.

DRUGS AND MEDICINES.

ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

பூனைக் காலி.

இதையே காஞ்சோறி யென்றும் பூனைக்காஞ்சோறி யென்றும் வழங்குவர். இதற்குள்ள சுணையினால் குழந்தைமுதல் அனைவரும் இப்பூண்டை நன்றாய் அறிந்திருக்கின்றனர். சர்மத்தில் சில இ[illegible] உண்டாகும் விரணங்களிலுள்ள கிருமிகளைப் போக்குவதற்கு இதன் சுணையுள்ள இலைகளை உபயோகிக்கின்றனர்; அதனால் எரித்தலும் சூடும் அவ்விடத்தில் அதிகமாய், ஒருவாறு அங்குள்ள ஸூக்ஷ்ம கிருமிகளை அழிக்கக் கூடும். ஆகிலும் இவ்விதம் உபயோகிப்பதற்கு பலர் இஷ்டப்படமாட்டார்.

இதன் இலைகளை நிழலில் உலர்த்தி சூர்ணம் செய்து, 5 பலம் சூர்ணத்திற்கு 8 அல்லது 10 பலம் தேன் விட்டுக் கிளறி லேஹ்ய பாகத்தில் எடுத்து வைத்துக் கொள்ளலாம். பெரியவர்களுக்கு ஒரு கழற்சிக்காய் அளவும், சிறியவர்களுக்கு அதில் அரைப் பிரமாணமும் கொடுக்கலாம். அல்லது இவ்விலைகளை தேனிலாவது, சர்க்கரைப் பாகிலாவது ஊறவைத்து, ஒன்று அல்லது இரண்டு நாட்கள் கழித்து அவ்விலைகளின் மேலுள்ள சுணைகளை மெதுவாகச் சிதைத்து, பிறகு அவ்விலைகளை அதே தேன் அல்லது பாகில் சேர்த்து லேஹ்யம் போல் கிளறி முன்போலவே உபயோகிக்கலாம்; இதில் சுணைகள் நீக்கப்படுவதால் 1 அல்லது $1\frac{1}{2}$ கழற்சிக்காய் பிரமாணம் வரையில் உட்கொள்ளலாம்; சிறுவர்களுக்கு 1 கழற்சிக்காய் விதம் கொடுத்து வரலாம். இதை விடாமல் 3 அல்லது 4 நாள் காலையில் உட்கொண்டு வந்து, பிறகு ஒரு தடவை நன்றாக விரேசனம் ஆகக்கூடிய ஔஷதமும் உபயோகிக்க வேண்டும்; மூத்திரம் அடைபட்டிருக்கும் அச்மரீ ரோகத்திலும், நீர்ச்சுருக்கு என்று சொல்லப்படும் மூத்திரக்ருச்சிர ரோகத்திலும், சுக்ரதாது பலவீனப்பட்டிருக்கையிலும் இவற்றை உபயோகிக்கலாம். பூனைக்காலி விதை 23 தோலா எடுத்து, 4 சேர் பசும்பாலில் வேகவைத்து, பால் நன்றாகக் குழம்பிப்போன பின்பு அவ்விதைகளை யெடுத்து அவற்றின் மேலுள்ள தோலை உரித்து விட்டு, உட்பருப்புகளைத் துவைத்து, நெய்யில் நன்றாக வறுத்து, அதற்கு இரண்டு பங்கு சர்க்கரை சேர்த்து லேஹ்யமாகக் கிளற வேண்டும்; பிறகு இந்த லேஹ்யத்தைச் சிறிய உருண்டைகளாக உருட்டி எல்லாவற்றையும் தேனில் ஊறவைக்கலாம். இதில் வேளைக்கு ஒரு

தோலா விதம் (180 நெல்லெடை) தினத்திற்கு இரண்டுமூன்று வேளை உட்கொள்ளலாம். இந்த லேஹ்யத்திற்கு சுக்ரலம்,வ்ருஷ்யம்(Aphrodisiac) அதாவது தாது புஷ்டி யென்று வழங்கப்படும் குணம் விசேஷமாயுண்டு. இதன் வேருக்கு வாதஹரகுணமும், நரம்பு மண்டலங்களுக்கு (Nervous tissue) வலிவைத் தரக்கூடிய பல்யம் என்கிற குணமும் உண்டு. ஆகவே பார்ச்வவாயு, இதரமான வாத நோய்கள், நரம்பு மண்டலத்தின் பலயீனம் இவைகளில் இந்த வேரைக் கஷாயமிட்டு உபயோகிக்கலாம். இந்த வேரை உலர்த்தி இடித்து இரண்டு பலம் எடுத்து $\frac{1}{4}$ படி ஜலத்தில் போட்டுக் காய்ச்சி, $\frac{1}{2}$ ஆழாக்காக வற்ற வைத்துக் குடிக்கலாம்.

வாஸாவ லேஹம்.

(வாஸா—ஆடா தோடை; அவலேஹம்—லேஹ்யம்.)

ஆடாதோடையை இடித்து இரஸம் பிழிந்து, அதில் ஒருபடி இரஸம் வடிக்கட்டி எடுத்துக் கொள்ளவும்; பிறகு கடுக்காய் 5 பலம், திப்பிலி 5 பலம் இலவங்கப் பத்திரி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, நாககேஸரம் இந்த நான்கும் தனித்தனி மூன்று பலம், சற்கண்டு 15-பலம் இவற்றைச் சூர்ணம் செய்து மேற்படி ஸ்வரஸத்தில் சேர்த்துக் காய்ச்சவேண்டும். பிறகு அந்த இரஸம் சிறிது வற்றிப்போய் லேஹ்யம் கெட்டியாக வரும் ஸமயத்தில் தேன் 10 பலம் சேர்த்து விடாமல் கிளரி, லேஹ்ய பாகத்திற்கு வந்ததும் இறக்கி விடவேண்டும். இதை தாமிர பாத்திரத்தில் காய்ச்சவேண்டும். ஒரு வேளைக்கு 1-தோலா உட்கொள்ளலாம். தினத்திற்கு மூன்று வேளை உபயோகித்து வந்தால் காஸம், ச்வாஸம், க்ஷயரோகிகளுக்கு உண்டாகும் மூச்சுத் திணறுதல் இதுகளில் வெகு நல்ல குணத்தைத் தரும். மூக்கிலிருந்தும் பற்களிலிருந்தும் சிலருக்குத் திடீரென்றோ வழக்கமாகவோ இரத்தம் கசிவதுண்டு; அவ்வித ரோகத்திலும் இந்த லேஹ்யம் வெகு பயன் தரக்கூடியது. (கதநிக்ரஹம்.)

NOTES AND ITEMS OF INTEREST.

பலவகைக் குறிப்புகள்.

மேதோ ரோகத்தின் (Obesity) சிகிந்ஸை:—ஒரு ஜெர்மனி தேசத்து வைத்திய நிபுணர் செய்ததாவது: அவரிடம் வந்த மேதோ ரோகிகளுக்கு (அதிஸ்த்தூல ரோகிகளுக்கு) அடியில் வரும் ஆஹார நியமத்தை ஏற்படுத்தி வெகு திருப்திகரமான குணத்தை உண்டாக்கினர். காலையில் ஒரு கோப்பை காபியும், வெண்ணெய் கலந்த ரொட்டியும் வேண்டியவளவு புஜிக்க வேண்டும். பகல் சாப்பாட்டு வேளையில் பசி அஸாத்யமாயிருந்தால் ஒரு துண்டு ரொட்டியை மட்டும் ஐந்தாறு அவுன்ஸ் பாலுடன் புஜிக்கலாம். அதாவது 10 அல்லது 11 மணிக்குஅவ்விதம் உபயோகிக்கலாம். சிற்றுண்டி (Luncheon) சாப்பிடும் நேரத்தில் கோதுமை மாவால் செய்த ஏதேனும் பணியாரமும், காய்கறிகளும், பச்சடியும் (Salad), ஒரு பழமும் சாப்பிடலாம். மாலை நேரத்தில் வெண்ணெயுடன் கூடிய ஒரு துண்டு ரொட்டியும், ஒரு கோப்பை காப்பியும் போதுமானது. பிறகு மறுநாட்காலை வரையிலும் ஒன்றுமே உண்ணக்கூடாது. இந்த ஆஹார நியமத்தைப் பின்பற்றுபவருக்கு முதலில் சில நாள் மட்டும் மாலைப்பொழுதில் அதிக பசி யெடுக்கும்; ஆகிலும் சிறிது நாட்களில் அவ்விதம் பசியே தெரியாமற்போய் விடும். சில நாள் வரையில் முதலில் சாப்பிடப்படும் இரண்டு வேளை உணவுகளையும் வேண்டியவளவு உட்கொண்டு வரலாம். இல்லாவிடில் சரீரத்தில் வலிவில்லாமற் போவதுடன் ஆரோக்கியக்குறைவும பல விதத்தில உண்டாகும். மாலை நேரத்திலும் இரவிலும் உபயோகிக்கப்படும் குரு போஜனமானது, இரவில் தூங்கும்போது ஒருவாறு ஜீர்ணமாய், தாதுக்களில் அழிவில்லாமல் மேன்மேலும் திரள் திரளாகச் சேர்ந்து, இவ்விதம் மேதஸ் என்கிற கொழுப்பைச் சரீரத்தில் விருத்தி செய்கிறதென்கிற கோட்பாட்டை அனுஸரித்து, அவ்விதமே பரீக்ஷைகள் செய்து பார்த்து, இரவில் சாப்பிடுவது மேதோ ரோகிகளுக்கு ஆகாதென்றும் நிச்சயித்து, இவ்விதமான முறை...னது கண்டு பிடிக்கப்பட்டது. இவருடைய ...இருந்த ...ஸைக்கு உட்பட்டவர்களுடைய தேஹத்தில ...ண்டு கொழுப்புகள் தினத்திற்கு ஒன்று அல்லது இ... பவுன் நிறையாகக் குறைந்து வந்ததாம். (மெ...கல் ரிகார்டு—Medical Record.)

டெல்லியில் வைத்திய கலாசாலை.

புதிய மஹாராஜாதானியான டெல்லியில் ஸ்த்ரீகளுக்கென்று ஒரு வைத்திய கலாசாலையும், அத்துடன் ஓர் ஆஸ்பத்திரியும் ஸ்தாபிக்கப்படப்போகிற விஷயம் பலருக்கு ஏற்கனவே தெரிந்திருக்கலாம். இந்த ஸ்தாபனங்கள் ...ட்சிமை தங்கிய மேரி சக்ரவர்த்தினி இந்தியாவுக்கு வந்து போனதின் ஞாபகார்த்தமாக ஏற்படுத்தப்படும். இதற்கு லேடி ஹார்டிஞ்ஜ் பிறந்த நாளாகிய இம்மாதம் 17-ந்தேதி அஸ்திவாரக்கல் அவராலேயே நாட்டப்பட்டது. நமது தேசத்து அரசர்களில் அநேகம் பெயர் இந்த ஸ்தாபனத்திற்குப் பொருளுதவி செய்வதாயிருக்கிறார்கள். ஏற்கனவே மன்னர்களின் உதவியினால் 15,00,000 ரூபாய் சேர்ந்து விட்டது. வருஷாந்த நிர்வாஹத்திற்காக இந்தியா கவர்ன்மெண்டார் லக்ஷம் ரூபாய் கொடுப்பதாய் வாக்களித்திருக்கிறார்கள். இந்த காலேஜில் உயர்குலத்து இந்திய ஸ்த்ரீகளும், கிருஸ்துவ ஸ்த்ரீகளும், இத்தேசத்தில் பிறந்து வளர்ந்த ஐரோப்பிய ஸ்த்ரீகளும் வைத்தியம் கற்பார்கள். வைத்திய பரீக்ஷைக்காகவும், தாதி பரீக்ஷைக்காகவும் வேண்டிய போதனா முறைகள் இக்காலேஜில் ஏற்படுத்தப் படும்.